தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:

கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆனி 6. (20-6-'59). சனிக்கிழமை | இதழ் 1



ஆறும் ஆண்டு தொடங்குகிறது!

ஆனந்தம் விளையாடுகிறது!

அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்.
எழுதிய

மாற்றங்கள்!

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்பது தமிழ் மொழி 'Old order changeth yielding place to new' என்பது ஆங்கில மொழி. இரண்டினாலும் நாம் அறிவது பழைய முறைகளும் பிறவும் மாறி புதியன புகுதல் இயற்கையில் நடைபெறுவது என்பதாகும். ஆகவே உலக இயற்கை நிலைத்து நிற்காது மாறி மாறிச் சென்று கொண்டே இருப்பதுதான். உலகமே அந்த விதிக்கு உட்பட்டே இயங்கிக் கொண்டே இருக்கிறது. இது இயற்கையும் கூட. மனித சமுதாயம் தோற்றாத காலத்துக்கு முன்பிருந்தே இந்த மாற்றம் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. எனினும் இன்று நம் வாழ்விடை நாம் காணும் மாற்றங்கள் இந்த இயற்கை வழிக்கு உட்பட்டனவா என்பதைச் சற்றே நினைத்துப் பார்க்க வேண்டும். இயற்கை நியதிக்கு மாறுபட்ட மனிதன் தனது விருப்பத்துக்கு ஏற்பச் செய்யும் எந்த மாறுதலும் வெறுக்கப்படுவதன்றி மறுபடியும் மற்றவரால் மாற்றி அமைக்கும் நிலைக்கே சென்று முடியும்.

இன்று நம் நாட்டிலும் உலகிலும் எத்தனையோ மாற்றங்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். இயற்கை நியதிக்கு ஏற்பச் செல்லும் சில மாறுதல்களைத் தவிர்த்துப் பல தேவை...ற மாறுதல்கள் நாட்டில் நிகழ்ந்து ...ண்டே ...இருக்கின்றன. மனித ... ஆற்றல் நிலையிலே ...று பல மாறுதல்கள் உண்டாகின்றன. நாட்டிலும் உலகிலும் ஆளுகின்ற மக்கள் மனநிலைக்கு ஏற்ப உண்டாகின்ற மாறுதல்கள் பலப்பல. எனினும் இம்மாறுதல்கள் அனைத்தும் மனித சமுதாய வாழ்வுக்குப் பயன்படுமாயின் அனைவரும் வரவேற்று மகிழ்வர். அன்றேல் உள்ளங் குமுறுவர்.

நாட்டில் இன்று எல்லவற்றிலும் மாறுதல்கள் நிகழக் காண்கின்றோம். அம்மாறுதல்களையும் விரைவில் செய்து முடிக்கவேண்டும் என அவாவுகின்றது ஆணையிடும் உள்ளம். அம்மாற்றத்தால் உண்டாகும் நலக்கேடுகளைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு காணக்கூடச் சில வேளைகளில் அவ்வுள்ளம் நினைப்பதில்லை மற்றவர்களுக்கு அதனால் என்னென்ன குறைகள் நேரிடும் என்று நினைப்பதுகூடக் கிடையாது. இதனாலேயே உலகிலும் நாட்டிலும் கொந்தளிப்பு உண்டாகின்றது. ஆணைக்குவந்த ஒருவர், தனக்குமுன் இருந்த எல்லாவற்றையும் மாற்றி அமைக்க எண்ணுவர். அப்படியே நாடுதோறும் பல மாற்றங்கள் இன்று நடந்துகொண்டே வருகின்றன.

உரிமை நாடுகளில் பலப்பல மாற்றுக்கட்சிகள் தோன்றி வளர்கின்றன அவற்றின் கொள்கைகளும் பலவாம். ஒவ்வொன்றிலும் நல்ல திட்டங்களும் உள்ளன. அவற்றால் அக்கட்சிகள் முன்னேற்றங்கொண்டு விடுமோ என அஞ்சி மாற்றுக்கட்சியாளர்கள் அக்கொள்கைகளைச் சிறு சிறு மாற்றங்களுடன் தம்மதாக்கிக் கொண்டு மக்களிடம் அவற்றின் வழிப் பல மாறுதல்களைச் செய்கின்றனர். இன்று பெரும்பாலான நாட்டு ஆட்சிகள் மக்கள் வழி இலங்குகின்ற காரணத்தால் அம்மக்கள் மனமறிந்து கொள்கைகளை உருவாக்கி மாற்றங்களைச் செய்தாலொழிய தாம் தாம் முன்னேற முடியாது என்ற நிலையை எல்லாக் கட்சிகளும் உணர்கின்றன. அதற்கேற்ற மாற்றங்களை உண்டாக்குகின்றன. ஆயினும் ஒரு சிலர் தேவையற்ற பல மாற்றங்களை உண்டாக்கி மக்கள் மனவேறுபாட்டையும்பெறுகின்றனர்.

நம் நாட்டில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் எத்தனையோ மாற்றங்களைக் காண்கின்றோம். எதை எடுத்தாலும் மாற்றி அமைக்க வேண்டும் என்ற மனப் பண்பு ஆள்வோரிடம் உருவாகிவிட்டது. சாதாரணப் பெயர்களின் மாற்றம், எழுத்து மாற்றம் முதல் நாட்டு ஆட்சி அமைப்பு மற்றம் வரையில் எல்லா மாறுதல்களையும் நாம் காண்கின்றோம். எல்லாம் மக்கள் வாழ்வுக்ெனவே சொல்லப் பெறுகின்றன. எனினும் இல்லாக் கொடுமைக்கு உட்பட்டு இறக்கும் நிலையும், குடிசை வளர்ச்சியும், கோவணக் காட்சியும் நாட்டை விட்டு நீங்கவில்லை. ஏன் ? மாற்றம் உண்டாக வேண்டிய இடத்தில் உண்டாகவில்லை. ஆம் - **மக்கள் மனம் மாறவில்லை**, அவ்வளவே.

ரூபாய், அணா, பை என்ற நிலை மாறி ரூபாய் நயா பைசை என்ற மாறுபாட்டைப் பெற்றோம். ஆண்டும் திங்களும் பெயராலும்-ஏன்-அளவாலும்கூட மாற்றம் பெறுகின்றன. எடை வகையில் மாறுபாடு காண்கின்றோம். சூட்டை அளக்கும் எண்ணிக்கையிலே மாறுபாடு. நீட்டல் அளவையிலே மாறுபாடு.மக்கள் உணவு வகையிலேயும் மாறுபாடு. ஊர்ப் பெயர்களிலே மாறுபாடு. வானொலி ஆகாசவாணியாக மாறுபாடு. இப்படி எத்தனையோ மாறுபாடுகள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. இத்தனை மாறுபாடுகளையும் ஒரே மூச்சில் விரைந்து செய்ய வேண்டும் என்பதால் உண்டாகும் குழப்பத்தை நாட்டில் நாம் காண்கின்றோம்.

கல்வித் துறையிலும் எத்தனையோ மாறுபாடுகள். கல்லூரிப் படிப்பிலும் சரி, ஆரம்பக் கல்வியிலும் சரி, இடை நிலைக் கல்வியிலும் சரி எத்தனை எத்தனையோ மாறுபாடுகளை இன்றும் நாம் காண்கின்றோம். அம்மாறுபாட்டிற்கிடையில் நம் நாட்டு இளஞ்சிறுவர் அகப்பட்டு அல்லலுற்று நிற்பதையும் அறிகிறோம்.

பொருளாதார மாறுபாடுகளும் நாட்டில் புகுந்துள்ளன. இன்று நாட்டில் தோன்றிய கூட்டுப் பண்ணை இயக்கம் விவசாயிகளிடை மாறுபாட்டை உண்டாக்க வழி காட்டுகின்றது. அந்த மாற்றம் தவறுடையது என்பதைப் பலர் எடுத்துக் காட்ட முன் வந்துள்ளனர். ஏன் ? ஒவ்வொரு மாறுபாட்டினையும் ஆய்ந்து காணும் அறிஞர்கள் அவற்றால் உண்டாகும் நலக் கேடுகளை ஆராய்ந்து அவ்வப்போது வெளியிட்டுத்தான் வருகிறார்கள். ஆயினும் மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. வரி விதிப்பில் உண்டாகும் ... நடக்கும் குழப்பத்... வோம். சென்னை ந... களுக்கு ஒரு மு... விதிப்பில் மாற்ற... வழக்கத்தால் வினை... யாரே அறியாதார்... கழகத்தை ஆ... நலக் கேடுகளை... தாண்டு மாற்ற... அமைக்க வழி கா...

ஆள வருகின்ற...வர் தய... னுள்ளவர் செய்...த அனைத்தையும் மாற்றி அவர்களை... மறக்கச் செய்ய வேண்டும் என்... நினைப்பாராயின், அடுத்து அவர்களுடைய செயல்களும் விரைவில் மாற்றி அமைக்கப் படும் என்ற உண்மையை மறந்தவர்கள் என்றே கொள்ள வேண்டும். நாடு வாழ மாற்றங்கள் தேவை தாம். அவ்வாறு இயல்பில் நிகழும் மாற்றத்தை யாராலும் தடுக்கமுடியாது. ஆனால் தம் ஆட்சிக் காலத்தில் இன்னின்ன மாற்றங்களை எந்தவி... எதிர்ப்பையும் பொருட்படுத்தாது செய்தோம் என்று பெருமைகொள்வதற்காகவோ-தம் உணர்ச்சியை வெறியாக்கிக் காட்டவோ-அன்றி உற்றார் உறவினருக்கு உதவி மகிழ்ச்சி பெறவோ-வேறு பயனற்ற காரணங்களுக்காகவோ - அன்றி மாற்றுக் கட்சிக்கு அஞ்சியோ நாட்டிலும் உலகிலும் மக்கள் விரும்பா மாற்றங்களைக் கொண்டு வருவார்களாயின், அவர்கள் ஆட்சி விரைவில் மாற்றம் பெறும். இந்த உண்மையைத்தான் உலக வரலாறும் இந்நாட்டுப் பழங்கதைகளும்நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன. எத்துணை நல்ல மாற்றமாயினும் மக்கள் மனமறிந்து, அவர் தம் மன மாற்றமின்று தொழிற்படவில்லையாயின் அதனால் பயன் இல்லைஎன்... உணரவேண்டும். மக்கள் ... யிலே எத்தனையோ மாற்றுக்... கள் ஆட்சிப் பீடத்துக்கு ... வந்து போகலாம். போர்க்... உயிர் கொடுத்துப் ... கட்சி இங்கிலாந்தில் ... மாறிற்று. பிறகு ம...படியு... தது;இப்படி எத்தனை எத்... மாற்றங்கள். இத்தகைய மா... களுக்கிடையில் மக்கள் வா... மனத்தில் கொண்டு - எல்... இன்புற்றிருக்க நினைக்கும் எ... துடன் அனைவரும் விரும்பு... யில் நாட்டில் மாற்றங்க... பெறுவதை அனைவரும் வர... அதுவே இயற்கையான ... மாகும். இயற்கை அன்... வாழ்வு நெறியே அதுதான். ஆக... நாட்டுத்தலைவர்கள் தம்முள் உள்... சிறு சிறு வேறுபாடுகளை மறந்து ஒன்றிக் கலந்து - உதட்டா... உளத்தால் ஒன்றுபட்டு, இய... நியதிக்கு ஏற்பமக்கள் வாழ்வு ப... தேவையான மாற்றங்களை ... செய்வார்களாக! எதையும் ... வேண்டும் என்ற மனப்... மடிவதாக! நல்ல மாற்ற... நாடு செழிப்பதாக!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

தென்றல்

மலர் 6 ‖ 20—6—'59 ‖ இதழ் 1

ஆறும் ஆண்டு!

"தென்றல்" தனது ஆறுவது ஆண்டை அடைகிறது, ஐந்து ஆண்டுகள் நிறையப் பெற்று. தமிழகமெங்கும் மழலை மொழி சிந்தி, திராவிட மக்களின் மனக்குறை நீக்கும் குழந்தைச் செல்வமாம் "தென்றல்" உங்களின், உளங்கனிந்த பொன்னான வாழ்த்துக்களுடன் ஆறுவது ஆண்டைத் தொடங்குகிறது.

குறுகுறு காட்டியும் இட்டும் கவ்வியும் அளாவியும் வளர்ந்த "தென்றல்" குழவி, போட்டி பலவற்றிற்கிடையே இப்பொன்னான வெற்றியைக் கண்டிருக்கிறது. தாயின் விழியிலே மகிழ்ச்சியைப் பொங்கச் செய்யும் திருக்காட்சி, மழலை பேசியவன் சிறுதேர் உருட்டி நடைபோடும் காட்சியாகும். ஆமாம்! திராவிட அன்னை, தான் பெற்றெடுத்து வளர்த்த "தென்றல்" செல்வத்தின் வளர்ச்சியிலே மகிழ்வதை, "தென்றல்" உணர்கிறது. தன்னை ஈன்று புறந்தந்து, போருக்கனுப்பி மகிழும் அந்த வீரமறத்தியின் பொன்னடியைப் பணிகிறோம். அன்னையே! நின்புகழ் வாழ்க! நின்வளப்பணியே எம்புகழ்அணி! நின்விடுதலையே எம்களியாட்டம்! அன்னையே! நீ அறிவாய், இழந்த வளர்ச்சியைப் பெற நாங்கள் பட்டபாட்டை! கடும்புயலும் கொடும் பகையும், கொத்திக் கிழித்தபோதும், துவளாது சென்றிருக்கிறோம்.

அரசியலாரின் கொடுங்கோலும் "தென்ற"லை வளைக்கப் பார்த்ததுண்டு. காகிதத் தட்டுப்பாடும் வசதிக்குறைவும் பாதையில் குறுக்கிட்டிருக்கின்றன. என்றாலும் திராவிடம் தந்த ஆதரவின் முன்னே - காட்டிய ஆர்வத்தின் எதிரே, அவை எல்லாம் தூள் தூளாயின. அதற்கு எம் நன்றி!

புதிய புதிய பகுதிகளை-இனிய இனிய சேதிகளை, முந்தி முந்தி தந்திருக்கிறது, "தென்றல்". நண்பர்கள் அவற்றைச் சுவைத்துத் தந்த மகிழ்வுரைகள், விடுதலைப் பயணத்திற்குக் கிடைத்த அருங்கனிகள். அக்கனிகள் தந்த ...துணர்ச்சியின் துணையுடன் இன்னும் பன்னூறு புதுமைகளைப் படைக்க ...க்கிறது, "தென்றல்". அவ்வப்போது திராவிடப் பெருங்குடி மக்களால் ... அறிவுரைகட்கும் அன்புமொழிகட்கும் ஏற்ப, நல்லவை அனைத்தும் ...டுவோம்; வல்லவை மிகுத்து வாகை சூட்டுவோம்!

விற்பனையாளர்களே! இந்த ஐந்து ஆண்டிலும் நீங்கள் காட்டிய ...ன்புக்கு எம்நன்றி! மேலும் உங்கள் உதவிகள் பெருகட்டும், தென்றலின் ...லிவால் திராவிடம் வாழ்வதற்கு; வளர்வதற்கு!

அல்லும் பகலும் அயராது உழைக்கும் அலுவலகத்தோழர்களே! ...கள் உழைப்பிற்கு நன்றி!

பேராசிரியப் பெருமக்களே! எழுத்தாளும் தோழர்களே! "தென்ற"லை ...ங்கள் விழியாய்க் கருதி, அவ்வப்போது நீங்கள் காத்து நின்ற ...பெருமையை-ஆண்மையை என்னென்று சொல்வோம். தென்றலின்மூலம் உங்கள் இனிய கருத்துக்களைப் படைக்கும் வாய்ப்பைத் தந்தமைக்கு ...ணக்கமும் நன்றியும்! வாழ்க! வாழ்க!

திராவிடப் பெருங்குடிமக்களே! இலட்சிய ஏடு நடத்துபவன்போல் பொருள் கேடு அடைந்தவன் எவனும் இல்லை. என்றாலும் இவ்வேட்டின் மூலம் மக்களின் பெருகிவரும் அன்பைப் பெறும் வாய்ப்பிருப்பதாலும், நல்ல ஒரு பணியைச் செய்யும் இன்பம் இருப்பதாலும் மகிழ்ச்சியுடன் இதைச் செய்கிறோம். அந்த மகிழ்ச்சியைத் தருவன உங்களின் பொன்றாத அன்பும் குன்றாத ஆதரவும்தான்! குறைவற இந்த ஆதரவைத் தந்த உங்கட்கு, கோடி கோடி நன்றி! ஏற்றிடுக; உம் "தென்ற"லின் பணி போற்றிடுக!

பொதியைத் தென்றலில் மலர் மணக்கிறது என்பர். கழகத்துத் "தென்ற"லிலே கொள்கை மணக்கிறது. ஆமாம்! என்றும் "தென்ற"லின் மூச்சு கழகக்கொள்கை! கழக வெற்றி! கழக வளர்ச்சி!

★

எம். ஜி. ஆர்.

★

கலையுலகின் விடிவெள்ளி - கழகத்தின் ஒளிமணி புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கட்கு 15-6-'59 அன்று சீர்காழியில் நடந்த நாடகத்தினிடையே கால் முறிந்தது என்ற செய்தி கேட்டுச் சொல்லொணாத்துயர் அடைகிறோம். சிந்தை, செயல், மூச்சு அனைத்திலும் சொந்த நாட்டின் பெருமையையே கொண்டுலவும் புரட்சி நடிகர் அவர்கட்கு வாய்த்த இத்துன்பம், நம்மனைவருக்கும் வாய்த்த-நல்லி... த்தாரைச் சாய்த்த-துன்பம் ஆகிறது. இலட்சியப் பயணத்திடை, இழிமொழிக்கும் ஏசலுக்கும் அஞ்சாது வீர... போட்டுவரும் அவர் தன் கால் விரைவில் குணமாகி, வளமா... காட்சியினை நல்குவாராக.

— ஆ-ர்.

சென்னை செயிண்ட் மேரீஸ் ஹாலில்
21-6-'59 அன்று மாலை 6 மணிக்கு
கண்ணதாசன் முன்னிலையில்
சு. சந்திரசேகரன் நடிக்கும்
"கள்வர் தலைவன்"
சரித்திர நாடகம் நடைபெறும்.
கதை-வசனம்: நாடகத் தந்தை சம்பந்த முதலியார் அவர்கள்.

திருச்சி மாவட்ட தி. மு. கழக
3-வது மாநாடு
1959 ஜூன் 20, 21 சனி, ஞாயிறு நாட்களில்
துறையூரில் நடைபெறும்
தலைவர் :
சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு
திறப்பாளர் :
முரசொலி மாறன் எம். ஏ.
அறிஞர் அண்ணா எம். ஏ., எம். எல். ஏ.
அவர்களும்
பொதுச்செயலாளர்
நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
அவர்களும்
மற்றும் கழக முன்னணி வீரர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.
கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்களுடன்
முரசு நாடக மன்றத்தார் நடிக்கும்
"உதய சூரியன்"
நாடகம் நடைபெறும்.
இசைநிகழ்ச்சிகளும் உண்டு.
அ. பெ. தர்மலிங்கம்,
தலைவர், வரவேற்புக் குழு.

ஊழலுக்கு ஆலவட்டமா?

நாடு எதிர்பார்க்காத முடிவு வந்து விட்டது! மக்கள் சிந்தை எல்லாம்-செவி எல்லாம், அந்த முடிவை நோக்கித் திரும்பியிருந்தன!

"தூக்கு மேடை நிறுவுகின்றனர்! முடித்துச் சாகப் போகின்றனர் துரோகிகள்!"

"ஊர்ச் சொத்தைக் கொள்ளையடித்த இந்தத் தீய மதியினரின் விழியைப் பொசுக்கப் போகின்றனர்! இரும்புக் கம்பி காய்கிறது, உலையில்!"

"கறை படிந்த கைகள்-களங்கச் சுவடி வரைந்த மோசடிக் கரங்கள், வெட்டி எறியப்படதான் போகின்றன! வாளைத் தீட்டுகின்றார் பிரதமர். உன் காதில் விழவில்லையா அந்த ஒலி!"

"நச்சு நினைப்பும் நாசச் செயலும் மோசக் கருத்தும் ஏமாற்று வித்தையும் நடமாடுவதா பாரதத்தில்! சீமான் நேருவுக்குச் சினம் கிளப்பும் கிருமிக் கூட்டங்கள் இவை! நாசச் செயலின் பிதா எவனானாலும் அவனை அழிக்காது விடார்!"

"அநீதியை அழிப்பதும் ஆணவத்தை ஒழிப்பதும் ஊழல்ஓநாயின் வாயைக் கிழிப்பதும்தான் அவர் வேலைகள்!"

"ஆசை காட்டி, பண மழை பொழிந்து, பாகுமொழி சிந்தித் தனக்கு வேண்டியதை நேருவிடம் முடித்துக்கொள்ளலாம் என எவனாகிலும் கருதினால் அவன் அழிந்தே போவான்! அப்படிக் கொழுப் படைத்த மண்டைகளைச் சுக்கு நூறாக்குவதுதான் பண்டிதரின் பணி!"

"வரிப் பணம் பொது மக்களின் வியர்வைத் துளிகள். அவற்றை அன்னார் கொட்டித் தந்ததால்தான் உருள்கிறது பாரதச் சகடம். அதைத் தடுக்க எந்தத் தடைக்கல் கிடந்தாலும் சிதைத்தே தீருவோம்!"

இவை மட்டுமா பேசினர்? எத்தனை எத்தனையோ இன்னும் பேசினர். அன்று காந்தி கட்சியாயிருந்து, இடைக்காலத்தில் நேரு கட்சியாகி, இன்று இந்திரா கட்சியாகியுள்ள காங்கிரஸ் கட்சியினர் இன்னும் எவ்வளவோ பேசினர். உறுதிமொழிகள் ஓராயிரம் கொட்டினர். ஆட்சி அன்னாரின் தூய்மையாலும் வாய்மையாலும் பெருமை பெறும் என்றுதான் எல்லோரும் நம்பினர். ஆனால் அடுத்தடுத்துப் பல ஊழல்கள்-பகிரங்க மோசடிகள் அந்த விந்தை மனிதர்கள் கண்முன் நடக்கத்தான் செய்கின்றன. அதைவிட வேடிக்கையாய் உள்ளது, அவர்களே அதற்குத் துணை போவது. அவற்றின் விளைவுதான், சமாதான வெளிச்சம் போடும் அன்னார் முகத்தில் முந்திரா கரி பூசிய கதை. ஆமாம்! கதையாகத்தான் முடிந்துவிட்டன, அத்தனையும். கதையிலே தான் கண்ணைக் கட்டிக் கைப்பொருளைக் கவர்பவனையும், கனியைக் கொடுத்துச் சற்பைப் பறிப்பவனையும், ஒன்றைக் கொடுத்துப் பத்தைப் பிடுங்குபவனையும் காணமுடியும். ஆனால் அந்த விலங்குகள் இன்று பாரத அரசில் பவனி வருகின்றன, முந்திரா, டால்மியா என்ற பெயர்களில். வாயடியும் கையடியுமாய்ப் புறப்பட்ட இந்த மோசடி மன்னர்களுள் மகுடம் சூடிய மன்னர் - இன்றையக் கதாநாயகர், முந்திரா தான். முந்திராவின் ஊழலுக்குத் துணை போனது இந்திராவின் கட்சி தான். இக்குற்றச்சாட்டு ஊரெங்கும் ஒலிக்கிறது. அதை விளக்கமாகக் காண்போம்.

ஆதாரங்கள்

[illegible]ல் ஏடுகள் தந்த கருத்துரை[illegible]ளும், இந்திய அரசினர் தம் முடிவை 3000 சொற்களில் (தீர்மான உருவில்) வெளியிட்டிருக்கும் விசேஷ கெஜட்டும் இக்கட்டுரைக்கு உதவுகின்றன.

யார் யார்? எவ்வெப்போது?

1957 ம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் **முந்திரா கன்சர்ன்ஸ்** என்ற நிறுவனத்தார், சில பங்குப் பத்திரங்களை விலைக்குத் தந்து, லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் பணம் வாங்கினர். அவற்றிற்குத் தரப்பட்ட பணம் 1 கோடி 26 இலட்சத்து 25 ஆயிரத்து 750 ரூபாய்களாகும். 1957 ஏப்ரலில் முந்திராவின் ஆட்சியிலிருக்கும் ஜெஸ்ஸோப் & கோ என்ற நிறுவனத்தின் 50000 பங்குகளை வேறு வாங்கியிருக்கிறனர்.

ரிச்சர்ட்ஸன் & குருதாஸ் கம்பெனியிடமும் அதே நிறுவனத்

முந்திரா விவகாரம்

திடமும், மேலும் பல பங்குகளை 1967 செப்டம்பரில் லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் வாங்கியிருக்கிறது. **இவை அத்தனையும் நிதித் துறைத் தலைமைச் செயலாளர் எச். எம். பட்டேல் அவர்களின் அறிவுரைப்படியே வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.** அத்தோடு இந்தப் பங்கு பத்திரங்கள் வாங்கப்பட்டபோது லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனின் தலைவராகவும் இருந்திருக்கிறார். 1957 ஜூன் 5-க்குப் பின்தான் காமத் கார்ப்பரேஷன் தலைவரானார். இந்த மூன்று பேரங்களின் போதும் எல். எஸ். வைத்தியநாதன் அவர்கள் கார்ப்பரேஷனின் மானேஜிங் டைரக்டராகப் பணியாற்றியிருக்கிறார். இவர்கள் மீதெல்லாம் மொத்தமாகச் சாட்டப்படும் குற்றச்சாட்டு இது தான்: "பொய்யான பங்கு பத்திரங்களைப் பொதுமக்களின் பணம் தந்து வாங்கினர்; ஏமாந்தனர்!"

நீதி விசாரணை!

பாராளும் மன்றத்தில் நேருவின் மருமகன் என்றும் இந்திராகாந்தி கணவர் என்றும் சொல்லப்படுபவரான பெரோஸ் காந்தி என்பவராலும் பிறராலும் இந்த ஊழல்கள் கிளப்பப்பட்டன. உடனே பிற உறுப்பினர்களும் கொதித்தெழுந்தனர். கொதிப்பைக் கண்டதும் கோலோச்ச வந்த பண்டிதர் நீதி விசாரணை நடத்துவதாகக் கூறிக் கண் துடைப்பு வேலை செய்தார்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் என்றால் என்ன?

உயிர் முறிக் கழகங்கள் பல இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்தன. ஓரியண்டல், பாரத், நியூ இந்தியா, பிருத்வி முதலிய லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தனிப்பட்டோரிடம் இருந்தன. அவற்றின் நிர்வாகஊழல்கருதியோ, ஏனோ இந்திய அரசின் நிதித் துறையினர் அவற்றைத் திடீரெனத் தேசிய மயமாக்கினர். 1956-ம் ஆண்டு ஜனவரி 19-ம் நாள்) 1956 செப்டம்பர் முதல் தேதி அதற்கான சட்டம் அமுலாக்கப்பட்டு, தேசிய மயமாக்கப்பட்ட இந்த உயிர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை, லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் (எல். ஐ. ஸி.) என்றனர். 1957-ல் அரிதாஸ் முந்திராவின் பங்குகளை எல். ஐ. ஸி. விலைக்கு வாங்கியது, பொதுமக்களது கவனத்தை ஈர்த்தது. உடன் பாராளும் மன்றத்தின் மக்கள் சபையினர் இதைப் பற்றி ஆய்ந்தனர். கேள்விக்கணைகள் பன்னூறு தன்னைக் குத்தியதும் தப்பித்துக் கொள்ளும் வழிகளைத் தேடினார் நேரு. 1952-ம் ஆண்டைய விசாரணை கமிஷன் சட்டப்படி, முந்திரா விவகாரத்தை விசாரிக்க ஒரு கமிஷனை 17-1-'58-ல் நிறுவினர்.

சக்ளா தனி மெம்பர் கமிஷன்

பம்பாய் உயர்நீதி மன்றத்து நீதிபதியாக இருந்த திரு. சக்ளா அவர்கள் இக்கமிஷனை மேற்கொண்டார். இவர் தனது அறிக்கையை 10-2-1958-ல் தந்தார். அந்த அறிக்கை மக்கள் சபையில், 19 & 20-2-'58 தேதிகளிலும், மாநிலங்கள் சபையில் 21-2-58-ம் தேதியும் விவாதிக்கப்பட்டது. இரு சபையும் சக்ளா கமிஷனின் குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டு, அதற்கான மேல்நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டின. சக்ளாவின் அறிக்கையில் முக்கியப் பகுதி, இதுதான்: "முந்திரா கன்சர்ன்சில் 1957 ஜூனில் வாங்கிய பங்குகள் தவறானவை. காமத்தும் பட்டேலும் வைத்தியநாதனும் தவறையே செய்துள்ளனர்."

சக்ளா கமிஷன் குற்றம் என்று சுட்டிக் காட்டியவை பற்றிச் சமாதானம் கூறும்படி எச். எம். பட்டேலுக்கும் ஜி. ஆர். காமத்துக்கும் கட்டளைகள் சென்றன. எல். எஸ். வைத்தியநாதனுக்கும் அப்படியே 1955-ம் ஆண்டைய, அகில இந்திய ஊழியம் (ஒழுங்கு & மறுப்பு) சட்டப்படி இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விவியன் போஸ் போர்டு

சமாதான விளக்கங்களை இவ்வதிகாரிகள் அனுப்பியதும் அவற்றை ஆராய, ஒரு விசாரணை போர்டுநிறுவப்பெற்றது, 5-5-1958 அன்று.

நீதிபதி விவியன்போஸ் த[illegible]ராக அமைந்த போர்டின் உறுப்பினர்கள், திரு. சுகுமார்சென், திரு. சத்தியநாதன் ஆகிய இருவர். காமத்தும்பட்டேலும் ஒருபுறம்; வைத்திய[illegible]நாதன் மட்டும் ஒருபுறம். ஆக இல்ல[illegible] பிரிவாக இம்மூவரும் விசா[illegible] ஏ[illegible]பட்டனர். 21-9-1958 அ[illegible]ப்பிட்[illegible]போர்ட் தன் அறிக்கையைத் த[illegible] யி[illegible] அவ்வறிக்கையின் சாரப்படி, இ[illegible]றப[illegible] அரசு, பட்டேலை, "ஏன் உம்[illegible] உ[illegible] பதவியிலிருந்து விலக்குவ[illegible]தை[illegible] மூலம் தண்டிக்கக்கூடாது?" என[illegible] கேட்டது. காமத்தை, "கட்டாய[illegible]மாக உம்மை ஓய்வெடுக்கும்படிச் செய்தல் ஏன் கூடாது?" என்று கேட்டது. இந்த இரு நோட்டீஸுக்கான பதில்களை அவ்வதிகாரிகள் 1959 ஜனவரி தொடக்கத்தில் அனுப்பி வைத்தனர்.

குடியரசின் அலுவலர் நியமனக் குழுவின் (U. P. S. C.) நுழைவு.

27-1-'59 அன்று இவர்களின் பதில்களைப் பரிசீலிக்கும் பொறுப்பு யூ. பி. எஸ். ஸி.யிடம் சேர்க்கப்பட்டது. அக்குழு சக்ளா கமிஷனின் கூற்றையும் விவியன் போஸ் போர்டு அறிக்கையையும் "நீர ஆராய்ந்து" தன் முடிவைத் தெரிவித்தது. அவ்வறிக்கையில் ஒரே ஒருவர்தான் நீதியை நிலைநாட்ட மறுப்புக் குறிப்பு எழுதி வைத்தார். அவர்தான் சென்னை சட்டமன்றத்தில் முன்னாள் சபாநாயகராயிருந்தவரும் இன்று யூ. பி. எஸ். ஸி.யின் உறுப்பினருமான திரு. சிவசண்முகம் (பிள்ளை) அவர்கள். குழுவின் மற்றைய உறுப்பினர்கள் பட்டேல் மீது விவியன்போஸ் சாட்டிய குற்றச்சாட்டைப் புறக்கணித்த நிலையில் இருக்க, சிவசண்முகம் (பிள்ளை) அவர்கள்மட்டும், **அக்குற்றச்சாட்டுக்களை உண்மை என வற்புறுத்தினார்.** பட்டேல் ஒரு வடநாட்டு அதிகாரி; நிதித் துறையின் தலைமைச் செயலாளர். அவர் எதையும் ஆராய்ந்துபார்க்கக் கடமைப்பட்டவர். ஆனால் அவர் முந்திராவின் பங்குகளை வாங்கும்படி காமத்துக்குத் தந்த கட்டளை தவறானது என்று விவியன்போஸ் கமிஷன் கூறுகிறது. மார்க்[illegible] நிலவரத்தை அறிந்து அதற்கே[illegible] முந்திராவின் பங்குகளுக்கு [illegible] கொடுக்கவில்லை அதன[illegible] [illegible] ஸி.க்கு இழப்பு மிகுந்து "ஏனை[illegible] நாலு பேரைக் கலந்து, மார்க்[illegible] நிலவரத்தை அறிந்து வாங்[illegible] கூடாதா?" என்றால், "இ[illegible] பேரம் கூடியமட்டும் மறைவாக[illegible] நடத்தப்பட வேண்டியிருந்த[illegible] இப்படிச் செய்தேன்" என்கி[illegible] பட்டேல். பொதுமக்களின் ப[illegible] இப்படி மறைமுகமாக- அ[illegible]மாக வீணாக்கப்படலாமா?

நமது பார்வையில்...

இதுகாறும் வழக்கின் நிலை[illegible] ஓரளவு தெரிந்தோம். இனி ஆராய்வோம். சக்ளா கமிஷனின் விசாரணை வெளிப்படையாக நடந்த[illegible] ஆனால் இன்னின்ன வகையி[illegible] குற்றவாளிகள் எனத் தெளிவா[illegible] கூறப்படவில்லை. விவியன் போஸ் குழுவினர் விசாரணை மறைமுகமாகவே நடந்தது. குற்றங்கள் எனக் கருதப்பட்டவற்றை,

— 13-ம் பக்கம் —

அநீதி மறைக்கப்பட்டதேன்?

சிலப்பதிகாரத்தில் நாகரிகக்கலப்பு!

டாக்டர் அ. சிதம்பரநாதன் எம்.ஏ.,பிஎச்.டி.

லப்பதிகாரத்தில் இருவித நாக சங்கள காணப் டுகின்றன. பழந் ர்கள் பழ காலத்திற் ண்டிருந்த துக்களும் கோள்களும் பதிகாரத்தில் ர் இடத்துத் படுகின்றன நாகரிகக் றிப்புகள் இலை மறை காய்போல் உள்ளன. சிலப்பதிகாரம் எழுதுவதற்கு ஆயிரம் ஆண்டுகள் முன்னதாக இருந்த நாகரிகத்தினுடைய அடிப்படைகள் ஆழமாகத் தோண்டிப் பார்ப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடியவாறு உள்ளன.

தொன்மை வாய்ந்த தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் தம் மொழியாகிய அருமைத் தமிழ்மொழியிலேயே செய்திகள் எல்லாவற்றையும் ஆற்றிக்கொண்டிருந்தார்கள். ஆடவன் பெண்ணை மணக்கும்நாளில் "உன்னைப் பிரியமாட்டேன், பிரிந்தால் உயிர் வாழமாட்டேன்" என்று தமிழிலேயே சொல்வது பெருவழக்காக இருந்தது. அது மாறச் சடங்குகள்மூலம் திருமணம் செய்வது வழக்கத்திற்கு வரத் தலைப்பட்டது. சடங்குகளோடு கோவலனுடைய திருமணம் நடத்தப்பட்டதாகவே சிலப்பதிகாரத்திலுள்ள மங்கலவாழ்த்துப் பாடல் காட்டுகிறது எனினும், பாட்டனுர் செய்த சடங்கோடு திருமணம் நிகழ்ந்தது என்பதை ஆராய்ந்துகொள்ள வேண்டிய நிலையிலேயே சிலப்பதிகார ஆசிரியர் அச்செய்தியினை விட்டுவிட்டார். "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட"க் கோவலன் கண்ணகியோடு தீவலம் செய்வதைக் காண்பவர்கள் என்ன நோன்பு நோற்றிருக்க வேண்டும் என்றவாறு இளங்கோ அடிகள் இயற்றினுர். திருமண நாளிலே மணமக்களுடைய கோலம் மிக்க அழகாக இருந்தது என்பதையும், இவ்விருவரும் விளக்கினைச் சுற்றிவரும் காட்சி காண்பதற்கு மிக்க இனிமையுடையதாக இருந்தது என்பதையும் இவ்விடத்தில் அவர் குறிப்பிட்டார். இங்கு அவர் "மாமுது பார்ப்பான்" என்று ...தைப் பார்ப்பான் என்று பொது ... அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் பொருள் செய்து கொண்டார் என்றாலும், அரும்பத உரையாசிரியர் என்னும் பழைய உரையாசிரியர் மாமுது பார்ப்பான் என்பது பாட்டனுரைக் குறிக்கும் என்றும், புரோகிதனை ஒருவேளை குறிக்கலாம் என்றும் எழுதினுர். தமிழ்நாட்டில் இன்றும் சில மாவட்டங்களில் மணமக்களுடைய பாட்டனுரே திருமணம் செய்து வைக்கும் உரிமை உடையவர்களாக இருக்கிறுர்களென்ற நிலையோடு இதனை ஒப்பிட்டால், பழங்கால வழக்கம் ஒன்று அரும்பத உரையாளர் குறிப்பிலிருந்து கிடைக்கப் பெறுகிறது என்பது தெரியவரும். ஆரிய வேதங்களில் சோதிட அங்கத்துள் வாணிகர்க்கு என்று கூறப்பட்டுள்ள வழியிலே பார்ப்பான் சடங்கு செய்யக் கோவலன் மணந்தான் என்ற குறிப்போடு அடியார்க்கு நல்லார் உரை எழுதினுராலும், இவ்வளவிற் நம் சிலப்பதிகாரச் சொற்களில் இடமில்லை என்பது தெளிவு. **பாட்டனுர் தமிழ் மறைமொழி கூறக் கோவலன் மணந்தான் என்று கொள்ளுதல் கூடும்.**

தண்ணீரில் மூழ்கினுல் உடம்பைத் தூய்மைப்படுத்திக்கொள்ளலாம் என்று பழங்காலத் தமிழர்கள் கருதினுர்கள். தண்ணீரில் மூழ்குதலால் உயிரையோ உளத்தையோ தூய்மைப் படுத்திக்கொள்ளக்கூடும் என்று அவர்கள் கருதவில்லை. இக்கருத்து தொல்காப்பியர் காலத்துக்கு முந்திய காலத்தில் தமிழ்நாட்டில் உலவிய அருங் கருத்து. இதனைத் தழுவியே திருவள்ளுவர்,

> "புறந்தூய்மை நீரான்
> அமையும்; அகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்"

என்று கூறினுர். இந்தக் கருத்து திருவள்ளுவர் வாழ்ந்த காலத்திற் புதுவதாகத் தோற்றிய கருத்து என்று கொள்ளுதல் கூடாது திருக்குறளில் திருவள்ளுவர் காலத்திற்கு முன்னுல் நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் வழங்கியிருந்த கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன என்பதை நினைவில் வைத்தல் வேண்டும். அவ்வாறு கொண்டால், தண்ணீரினுல் வெளித் தூய்மை ஏற்படும், உண்மை பேசுவதால் உளத்தூய்மை ஏற்படும் என்ற கருத்துப்பட உள்ள இத்திருக்குறள் பழைய தமிழகத்தின் நிலைமையை எடுத்துக் காட்டுவதொன்று என்பது புலப்படும். ஆனுல், இடைக்காலத் தமிழகத்தில் தண்ணீரிற் படிவதாற் புண்ணியம் உண்டென்று போலி எண்ணம் தலையெடுக்கலாயிற்று. ஊர்தொறும் உள்ள நீர்த்துளிகளிற் பாவங்கள் பல செய்த இந்திரனும், பிரமனும், சூரியனும், சந்திரனும், தேவர்களும் பிறர் பிறரும் வந்து மூழ்கி உய்ந்தார்கள் என்று பிறமொழிக் கதைகளில் மக்கள் நம்பத் தலைப்பட்டனர். அக்காலத்தில்தான் இந்த இந்தத் தீர்த்தத்தில் மூழ்கினுல் இன்ன இன்ன பலன் என்ற எண்ணம் தமிழ்நாட்டிலும் பிறக்கலாயிற்று. அதற்கு எடுத்துக் காட்டாகச் சிலப்பதிகாரத்திலிருந்து ஒரு செய்தியைக் கூறுதல் கூடும். கண்ணகியின் தோழியாய் அமைந்த தேவந்திகை என்ற பார்ப்பனப் பெண் ஒரு நாள் கண்ணகியை நோக்கி, "உன்னைப் பிரிந்திருக்கிற உன் கணவனை மீட்டும் நீ அடைவதற்கு ஒரு வழி உண்டு. சூரிய குண்டம், சோம குண்டம் என்ற பெயருடைய நீர்க் குட்டைகளில் மூழ்கினுல் உன் கணவனை மீட்டும் அடையலாம். ஒரு நாள் என்னேடு வருவாயாக" என அழைத்தாள் என்றும், கண்ணகி அது பொருந்தாது என்று திடமாகக் கூறிவிட்டாள் என்றும் கதைத்திறம் உரைத்த காதையால் அறிகிறேம். கண்ணகி சொல்லிய சொற்கள் சிலவே. அவை "பீடு அன்று" என்பவை. "பீடு அன்று" என்ற சொற்களில் "தமிழப் பெண்களுக்கு அது பொருந்தாது" என்பதை எவ்வளவு திட்பநுட்பமாகக் கவிஞர் அமைத்துள்ளார் என்பது உன்னத்தக்கது. கண்ணகி பிரிந்திருக்கும்கணவனை மீண்டும் பெறுதற்கு ஆற்றிலோ குளத்திலோ நீராடமாட்டேன் என்று திண்ணமாக எடுத்துரைத்த வீரத் தமிழ் மகளாகவும், தேவந்திகை பிரிந்த கணவனை மீட்டும் பெறுதற்காக 'தீர்த்தத் துறை படிவேன்' என்று கூறிக்கொண்டிருந்த ஆரிய அணங்காகவும் இளங்கோ அடிகளால் அமைத்துக் காட்டப்படுவதை உற்று நோக்கினுல் அன்றி எவ்வாறு அறிதல் கூடும்?

மதுரைக்காண்டத்து முதற் காதையாகிய காடுகாண் காதையில் மாங்காட்டு மறையவன் என்ற ஒருவன் வருகிறுன் கவுந்தியடிகள் என்ற தமிழ்நாட்டுப் பெண்டிர் ஒருவர் அம்மறையவனை நோக்கி மதுரைக்குச் செல்லக்கூடிய வழியைக் கேட்க, அதை எடுத்துக் கூறிய இம்மறையவன் மூன்று வழிகள் கூறி, இடைப்பட்ட வழிமருங்கு சென்றுல் மூன்று பொய்கைகள் வரும் என்றும், அவற்றின் பெயர் புண்ணிய சரவணம், பவ காரணி, இட்ட சித்தி என்றும் கூறினுன். ஒவ்வொரு பொய்கையிலேயும் மூழ்கினுல் இன்ன இன்ன பயன் உண்டாகும் என்றும் அவன் கூறினுன். புண்ணிய சரவணத்திற் பொருந்தினுல் விண்ணவர் கோமான் விழுநூல் எய்தலாம் என்றுன். பவகாரணியிற் படிந்தால் பழம் பிறப்பில் வாழ்ந்த விதம் அறியலாம் என்றுன். இட்ட சித்தியில் வீழ்ந்து எழுந்தால் இட்ட சித்தி எய்தலாம் என்றுன். கவுந்தியடிகள் என்ற அம்மையாரோ இம்மறையவனை இகழ்ந்துரைத்து, "பொய்கைகளில் நான் மூழ்கமாட்டேன்" என்ற உரத்தோடு உரைத்துச் சென்றுர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. கவுந்தியடிகள் "இந்திர வியாகரணத்தைப் புண்ணிய சரவணத்திற் பொருந்தியா அறிந்துகொள்ள வேண்டும்? அது எங்கள் தமிழ்நூல்களில் இல்லாததையா கூறுகிறது? சென்ற பிறப்பில் இருந்த விதத்தைப் பவ காரணியில் மூழ்கித்தானு அறிய வேண்டும்? இப்போதுள்ள பிறப்பினைக் கொண்டே சென்ற பிறப்பில் எவ்வாறு இருந்து இருத்தல் கூடும் என்பதை ஊகிக்க முடியாதோ? இட்டசித்தியில் மூழ்கித்தானு கருதியது கைகூடப் பெற வேண்டும்? உண்மை பேசுவதினின்று வழுவாமல் மன்னுயிர்க்கு அன்புடையவர்களாக இருந்தால் அடையமாட்டாத அரும்பொருள் உண்டோ" என்ற துணிவுடன் கேட்டு, "உன் வழி நீ செல்; எங்கள் வழி நாங்கள் செல்கிறேம்" என்று கூறிச்சென்றுரென அருமையாக இளங்கோ அடிகள் அமைத்துச் செல்வதிலிருந்து ஊகிக்கப்படுவது யாது? தண்ணீரில் மூழ்குவதால் ஞானம், உண்டாகும் என்றே, புண்ணியம் பிறக்கும் என்றே நினைப்பது பழந்தமிழ்நாட்டு மரபன்று என்பது அன்றே? இக்கருத்தினை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறிய.

> **"நித்தம் நித்தம் நீராடில்**
> **நெடுமால் அருளைப் பெறலாமேல்**
> **தத்தும் தவளை மீன்களும் ஆத்**
> **தனிப்பேறடைய**
> **வேண்டாவோ"**

என்ற பாவின் பகுதியோடு ஒப்பு நோக்கலாம்.

(தொடரும்)

நாத்திகர்கள்!

அண்மையில், இரஷ்யாவிற்குச் சென்றிருந்த அகில இந்திய சமாதானக் குழுவின் தலைவர் **சுந்தர்லாலுக்கு**, லெனின் அமைதிப் பரிசு தரப்பட்டது. அதற்கு நிகழ்ந்த கூட்டத்தில் பேசுகையில் "நான் ஒரு மதவாதி. ஆனுல் நீங்கள் (குருஷ்சேவ்) உங்களை ஒரு நாத்திகர் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறீர்கள். ஆனுல் நான் என்னுல் முடிந்த அளவு ஆழ்ந்து கற்ற உலகத்து மதநூல்கள் அனைத்தின் அடிப்படையிலும் சொல்கிறேன். **நீங்கள் மனிதவர்க்கத்தின் மிகப்பெரிய மதத்தலைவர்களுள் ஒருவர்!"** என்றுர் இந்தியத் துணைக்கண்டத்து, சுந்தர்லால். இதனைக் கேட்ட குருஷ்சேவ் துடித்துப்போய்ப் பதில் சொன்னுராம் இப்படி! **"நீங்கள் ஓர் ஆத்திகர். நான் ஒரு நாத்திகன். ஆமாம்! இதுதான் உண்மை!"** செவியில் அறைந்திருக்கிறுர் இப்படி செங்கொடிச் சீமான் குருஷ்சேவ்!

∴ ∴ ∴

யாரையும் மதிக்காத போக்கு "நான்சென்ஸ் தலைவர்" நேருவுக்கு எப்போதும் உண்டு. காந்தியையும் கடவுளாக்கி, பஜனை பண்ணுகின்ற காங்கிரசாரின் தலைவர் நேரு ஒரு படி கடந்திருக்கிறுர். அண்மையில் குளிர்ச்சியான உதகையில் இருந்து சிந்திய சூடான மணிமொழிகள் இவை:

"நான் எதிர்காலத்தைக் கண்டு எவருக்கும் அஞ்சுவதில்லை. **நான் மத நம்பிக்கையில்லாதவன். எனவே கடவுளுக்குக் கூட நான் அஞ்சுவதில்லை!"**

செங்கொடிச் சீமானின் சீடர்களே! காந்தியாரின் வாரிசுகளே! கழகத்தைக் காய்கின்ற நாவினரே! காதில் விழுகின்றனவா இச்சேதிகள்?

தொல்காப்பியச் சுவை

நீ யார்?
தமிழன்.

உன் நாடு எது?
தமிழ் நாடு

உன் மொழி?
செந்தமிழ்.

...என்று தலை நிமிர்ந்து சற்றுத் துணிவோடு கூற முடிகிறது என்ருல் அதற்குக் காரணம் பெரும் பேராசிரியர் தொல்காப்பியர் என்ருல் ஐயம் இல்லை. நாட்டு மக்களின் உள்ள உணர்வுகளையும், இல்ல முறைகளையும், நடையுடை நிகழ்ச்சிகளையும் நயம்பட நமக்கு இன்றும் காட்டும் ஒரே நூல் தொல்காப்பியம்.

1. அறிமுகம்.

தொல்காப்பியம் என்றவுடன் ஏதோ படிக்க முடியாத, படித்தாலும் கூடப் புரியாத ஏதோ ஒன்று என்ற எண்ணம் பொதுவாகப் பலரிடம் நின்று நிலவி வருதலை இன்றும் காணலாம். காரணம், நம்மை நாம் உணராததே தவிர வேறு ஒன்றும் விளம்ப முடியாது.

உண்மையிலேயே தொல்காப்பியம் என்ருல் என்ன? அது சொல்லும் செய்திதான் என்ன? எதைக் கேட்டாலும், யாரைக் கேட்டாலும் எல்லாம் தொல்காப்பியத்தில் பார் என்கிருர்களே? என்ற ஐயங்கள் உணர்வுடைய உள்ளங்களில் எழுதல் இயல்பே. அத்தகைய அரும் பெருஞ் செய்திகளைத் தன்னிடம் கொண்டுள்ள முறையினைக் காண முயல்வோம்.

தொல்காப்பியர் யார்? அவர் காலம் என்ன? இவை அடிப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகள். தொல்காப்பியர் என்ற பெயருடைய, இவர் இயற்பெயர் யாது என்று அறியக் கூடவில்லை. இவர் இயற்றிய இலக்கண நூலின் பெயரே சிறப்புக் கருதி இவருக்கும் பெயராயிற்று. இவருடைய காலம் கி. மு. 4 அல்லது 5-ம் நூற்ருண்டு என்பது நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியாரின் கருத்தாகும். இவரைப்பற்றிய பிற செய்திகள் இவர் நூலினின்று அறியக் கூடவில்லை. தமிழ் உணர்ச்சியும், உரிமையுணர்வும் செய்திகளைக் கூறும்போது புலனுகின்றது. உளநூல் வல்லுநராக வாழ்ந்திருக்க வேண்டும்.

தொல்காப்பியம் நுவலும் செய்திகள் யாவை? பள்ளி மாணவனைக் கேட்டால் வினுவுக்கு விடை கூறுவது போன்று மட மடவென்று கூற முடியாது. தொல்காப்பியம் மிகப் பெரும் இலக்கிய...இலக்கண நூல் என்ருல் தவறில்லை. மூன்று அதிகாரங்கள், முறையே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகும். இவை பொது. எழுத்தில் தமிழ் எழுத்துக்களைப்பற்றிய வரலாறும், தோன்றிய முறையும், வழங்க வேண்டிய முறையும் அழகுபட அமைந்துள்ளன. சொல்லதிகாரத்தில் எழுத்துக்கள் கூடிச் சொற்கள் ஆகும் முறையும் அவற்றை வழங்கும் வகையும், வழங்கக் கூடாத முறையும் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன. பொருதிகாரம் மிகவும் வேண்டப்படும் அதிகாரம் ஆகும். தமிழினம் இன்று தலைநிமிர்ந்து பிறரால் புகழப்படுவதற்குக் காரணம் தொல்காப்பியம். தமிழன் என்ருேர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு என்பது தொல்காப்பியம். இத்தனையையும் இன்ன பிறவற்றையும் தன்னுள்ளே அடக்கிக்கொண்டுள்ள நூல் தான் பொருளதிகாரம். தமிழினம் வாழ்ந்த முறைகளைக் காட்டி, விழித்துக்கொள் என்று விளக்கும் நூல் தொல்காப்பியப் பொருளதிகாரம்.

பொருளதிகாரத்தைப் பற்றித் தெரிந்துகொண்டால் ஓரளவு நம்மை நாம் தெரிந்துகொண்டோம் என்னலாம். பொருளதிகாரத்தில் ஒன்பது பிரிவுகள் உண்டு. அவற்றுள் நாம் முதல் ஐந்து பிரிவுகளைப் பற்றி முதலில் அறியத் தொடங்குவோம். அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல் என்பவை மக்களின் இல்லற வாழ்வியலைப் படமிட்டுக் காட்டுகின்றன. ஒவ்வொரு இயலாகக் காணும் முன்னம், பொதுநிலையில் சில செய்திகளைக் கூறுதல் கடமையாகும்.

வாழ்க்கை முறை இரண்டுவகைப்படும். அவை அகவாழ்வு, புறவாழ்வு என்பவையாம். அகவாழ்க்கையைப் பற்றிய செய்திகள் எல்லாம் பிறருக்குப் புலனுகாது. காரணம் அது அக (உள்) வாழ்க்கை என்பதால். விளக்கம் வேண்டும், ஒரு தலைவனும் தலைவியும் கண்ணுல் கண்டு காதல் கொண்டு களவு வாழ்க்கை வாழும் முறை பிறர் அறியக்கூடியதல்ல, எனவே அது தலைமக்கள் இருவர் மட்டுமே அறிதலின் அது அகவாழ்க்கையாகிற்று. புறவாழ்க்கை என்றவுடன் ஏதோ துறவு வாழ்க்கை என்று எண்ணிவிடக்கூடாது இல்லற வாழ்வினிடையில் பொருள் ஈட்டவும், அரசருக்குத் துணையாகப் போர் செய்யவும் செல்லல் போன்ற செயல்கள் அவ்விருவருமேயன்றிப் பிறரும் அறிதல் கூடும் என்பதால் புறவாழ்க்கை என்ருர் இவ்விரு வகை வாழ்க்கையும் ஒவ்வொரு தமிழ்மகனிடமும் இருந்தது என்பதையே பொருளதிகாரம் சற்றுத் தெளிவாகக் காட்டுகிறது. அகவாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்கள், தலைவன் தலைவியர் இயல், உரிமைகள், பரத்தையர் இயல்பு, தலைவிக்கு உறுதுணையாம் வாயில்கள், அவர்தம் இயல்பு உரிமைகள், ஒவ்வொருவரும் பேசும் பான்மை, அனைவருக்கும் தலைவன் மாட்டு உள்ள உறவு உரிமை, இல்லறத்தார் இயல்புகள் ஆகிய பெருஞ் செய்திகளைக் கூறும் நூல் தொல்காப்பியப் பொருளதிகாரம்.

ஏனைய நான்கும் முன்னைய ஐந்து இயல்கட்குத் துணையாக அமைவனவேயாகும். மெய்ப்பாட்டியல் என்பது தலைவ[…] தலைவியரிடை[…] காதல் தொ[…] வேளையும், […] வாழ்விலும் […] னும் குறி[…] நிகழ்ச்சி[…] போதும் ஏ[…] கூடிய […] நெகிழ்ச்சி[…] காட்டும் ச[…] யோகும். உ[…] இயல் என்[…] அவ்விருவர் மாட[…] டும் ஏற்படு[…] உள்ளத்து வளர்ச்சியில் உருவாகும் கற்பனையைக் காட்டும் துலாக்கோல். செய்யுளியல் என்பது பொதுவாகச் செய்யுட்களைப் பற்றிய இலக்கணத்தைக் கூறினுலும் சிறப்பாகத் தலைமக்கள் வாழ்வியலை எவ[…] முறையில் பாடவேண்டும் என்றும், இறைவனைப் பற்றி எப்பாடலில் பாட வேண்டும் என்றும் கூறுகின்ற[…] பொருளியல் என்பது உலகில் உள்[…] பொருள்கள் அனைத்தையும் […] வகைசெய்து அவற்றின் இலக்[…] தைக் கூறி, அவை வ[…] முறைமை கூறி, உயிரினங்க[…] வகைப்படும் அவை ஒன்று […] ஆறு அறிவுடையவை என்று[…] வோர் அறிவுக்கூடுதலுக்கும் உ[…] அறிவுவளர்ச்சியும் கூறப்படுகின்றன. மக்களைப்பற்றி மட்டுமில்லாமல் மரஞ்செடி கொடிகளைப் பற்றியும் அவற்றின் இயல்பு பற்றியும், பறவையின் வாழ்வு முதல ஊன் தின்று உலவும் விலங்கினங்கள் வாழ்வு வரை விளக்கமாகப் பொருளியலில் கூறுகிருர்.

தொல்காப்பியத்தைப் படிக்கும் போதுதான் முதல் சூத்திரம் தொடங்கிப் படிக்கவேண்டுமே தவிர ஓரளவு தெரிந்த பின்னர் எவை எவை வாழ்க்கை முறைபற்றிக் கூறுகி[…] எவை உளவியலைப்பற்றி[…] கிறது? எவை இன்பத்தை […] மட்டும் கூறுகிறது? எவை உரிமைகளை மட்டும் கூறுகிறது? என்று எளிதில் அனைவரும் அறியும்வண்ணம் அமைத்தல் பயன் தருவதாகும். அவ்வகையில் இதனை முன்னு[…] யாகக் கொண்டு அடுத்த கிழமை முதல் தொல்காப்பியப் பொருள[…] காரத்துள் நுழைவோம். பழைய[…] கழிந்து ஆயிரம் புதியன புகுந்த[…] லும், மூத்த தமிழ்மொழியின் இலக்கணத்தின் பல அடிப்படை விதிகள் மாறவில்லை. வாழ்வுக்கும் மொழிக்கும் தொல்காப்பியம் வகுத்த அந்த இலக்கணங்கள் இன்றும் பல புதிய வழிகளைத் தருகின்றன. அவற்றை முறைப்படிக் கற்போம்; தமிழின் நலன் அறிவோம்! ★

தமிழரது பழம் பெரும் இலக்கணச்சுவடி தொல்காப்பியம். இலக்கண நூல் என்பதால் இதனை அணுகவும் அஞ்சுவோருண்டு. அவர்கட்கெல்லாம் துணிவும் வலிவும் சேர்க்கும் முறையிலும், சிந்தையில் பதியும் நடையிலும், இங்கே தரப்படுகிறது, அந்நூலின் சுவை. புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள அரிமழத்தைச் சேர்ந்தவர் தோழர் இராம. இராமநாதன் **பி. ஏ. (ஆனர்ஸ்.)** அவர்கள் மதுரை தியாகராசர் கல்லூரியின் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிருர். ஆர்வமும் ஆற்றலும் மிக்க இவர், தொல்காப்பியச் சுவைகளைத் தொகுத்துத் தருகிருர் ஈண்டு. ஐயம் ஏற்படும் காலை எழுதுக; விளக்கம் தரப்படும்.

★ இராம. இராமநாதன், பி. ஏ. (ஆனர்ஸ்.) ★

அடுத்த இதழில் —
தொல்காப்பியத்தில் களவியல்.

புதிய பாரத மாதாவும் தெலிங்கானா வீரரும்

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியத் துணைக்கண்டத்து அரசியலில் மிகவும் முக்கியமான இடத்தினைப் ...ற்றுவருவதை, ஏகஇந்தியப்பித்தர் ...ரும், நாட்டுப்பிரிவினையை ஏற்றுக்கொள்ளாத எத்தர்களும், எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பலப்பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப்பேசுவதும், அதன் கொள்கை-இலட்சியங்களைப்பற்றி விவாதிப்பதும் தங்கள் தகுதிக்கு குறைவென்றும், ...ங்கள் இதனைப் பெரிதாக மதிக்கத் ...பாராக இல்லையென்றும் கருத் ...றிவித்த பல அரசியல் தலைவர்களை நாம் கண்டுள்ளோம். கழகத்தின் விடுதலை வேட்கையை, தென்னக மக்களின் இதயவேட்கை என்று உணர்ந்துகொள்ள மாற்றுக்கட்சியினர் இவ்வளவு காலம் தாமதித்துவிட்டார்கள்! திராவிடத் தனியரசு அமைவது ஏகஇந்திய வாதிகளின், புதிய பாரதத்து அடிமைகளின் ஆசைகளுக்கெல்லாம் அபாய அறிவிப்பாக இருப்பதால் தங்களையும் ...றியாமல் உணர்ச்சிகளைக் கொட்டி ...சொற்களால் கழகத்தின்மீதுள்ள ...ச்சலைக் காட்டுகிறார்கள். விடுதலை ...க்கத் தலைவர்களாகவும் தளபதிக...வும் விருதுபெற்ற பலரும்கூடக் ...கத்தின் நாட்டுப் பற்றையும் அதற்...கச் செயல்முறைகளையும் சரியான வழி...ிக்கத் தெரியாமல் உளறிக்...சில ...ய காலம் ஒன்றிருந்தது. திரு...கச் சொல்லவேண்டுமானால் ...ல் நேருவின் பலநேரப் பேச்...க்களைக் கணக்கிட்டால் ...போம்! 1953-ம் ஆண்டு என்று ...ணி...றுகிறேன், அண்ணாவைப் பல் ...லை ...கழகத்தில் நடைபெற்ற அகில ...ந்திய எழுத்தாளர் மாநாட்டுக்குத் ...மை வகித்து அதன்பின் வேலூர்ப் ...துக்கூட்டத்தில் பேசிய நேரு ... கழகம் என்ற ... உச்சரிக்க ... நிறைந்த ... கழகமா, ...ர்! ...ளன் ... ஏற்றுக் ...யக்கத்தின் ...கூட லாயக் ...ன்றாரே என்று ... அதே நேரத்தில் ...ல்குடி மாநாட்டில், ...றிய ...ாட்டத்திற்கு அடி...வாக அந்த எழுச்சி மாநாட்டில் ...ன் செல்வர் சம்பத் "தென்...டு ...வப்பத்தைத் தாங்கமுடியாத ...ருவுக்கு கழகம் என்ற அழகான ...ல்லை உச்சரிக்க முடியவில்லை. ...ருடைய வாயிலே அந்த ...ர்த்தை நுழையவில்லையாம். ...ம் நேருவே அந்த வார்த்தை, ...னகத்து மக்களின் விடுதலைப் ...யைக் குறிக்கும். அது உன் ...டைய வாய்க்காகத் தயாரிக்கப் ...தல்ல. இது ஒன்றே போதும் ... வேறு; நாங்கள் வேறு என்ற ...ண்மையை மெய்ப்பிக்க" என்று ...ழக்கமிட்டார்! இந்த நேரத்தில் கழகம்-திராவிடம் என்ற சொற்களெல்லாம் மிக எளிதிலே வாயினுள் நுழைகின்றன. பொருள் புரிந்தோ புரியாமலோ புலம்பவும் செய்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டு விடுதலைப் பணியை ஏளனம் செய்வதற்கு இங்கே ஏராளமான கூலிப் படைகள் உண்டு! டில்லியிலே உள்ள ஆதிக்க வெறி...ர்களின் புன்னகைக்குத் தவமிருக்...ம் தலைவர்களும் இருக்கிறார்கள்! ...ல இந்தியக் கட்சிகள் என்ற ...மையுடன் வடவருக்கு வால்பிடித்துத் தாளேர்தும் அடிமைகளுக்கும் இங்கே இடமுண்டு. இவர்களுக்கு, சுய எண்ணங்களும் சிந்தனையும் இல்லையென்பதற்கு சான்றுகள் பல காட்டலாம் என்றாலும் ஒன்றிரண்டைமட்டும் விளக்கினால் போதும். 'இந்தியா' என்றழைக்கப்பட்டு வந்த இந்தத் துணைக் கண்டத்தை சில ஆண்டுகளாக 'பாரதம்' என்றே திட்டமிட்டுப் பேசுகிறார்கள்! பாரதப் பிரதமருக்கு வெளி நாட்டு வரவேற்புகள் என்று மகிழ்ச்சியிலே திளைக்கிறார்கள்! இந்திய அரசியல் திட்டம் துணைக் கண்டத்து மக்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும் திட்டமென்று பேசுகிறவர்கள், செயல்படுகிறவர்கள், பெருமைப்பட்டுக்கொள்பவர்கள், 'பாரதம்' ஆக்குவதற்கு எவருடைய ஒப்புதலையும் பெறவில்லை! தென்னாட்டிலேயிருந்து டில்லி சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த அளவிற்கு உரிமையற்றவர்களாக உள்ளார்கள் என்பதனை இது உறுதிப்படுத்துகின்றது. ஆனால் வேறு பல நேரங்களில் இந்தியா-இந்தியா-என்றே தெரிவிக்கிறார்கள்! 'பாரதம்' என்று சாதனையைக் காட்ட அவர்களின் ஆசை நெஞ்சம் கூட அச்சப்படுகிறது! பாரத சர்க்காரின் வெளி நாட்டு உள்நாட்டுக் கொள்கைகளுக்குப் பாராட்டும் நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கின்ற கம்யூனிஸ்ட்கள் இன்னும் தங்கள் கட்சியை அகில பாரதக் கம்யூனிஸ்ட் கட்சியென்று பெயர் மாற்றிக்கொள்ள வெட்கப்பட்டுக் கொண்டுள்ளார்கள்! திராவிடம்-திராவிட இனம்-என்ற பெயர்களையும் அவைகளின் வரலாற்றினையும் தங்களின் மிகக் குறைந்த அரசியல் அறிவினால் மதிப்பிடுகின்ற அத்தனை பேர்களும் 'பாரதம்' என்ற புதுப் பெயரினைப்பற்றி சிறிதும் சிந்திக்கத் தயாராக இல்லை. அகில இந்தியப் பெயரில் எந்தக் கட்சியில் இருந்தாலும் பாரத மாதாவின் திருச்செல்வர்களாக இருக்கவே விரும்புகிறார்கள்! திராவிட மாயை என்றும் நாட்டுப் பிரிவினை கானல் நீரென்றும் சொல்லுகின்ற சில துருப்பிடித்த மூளைகளையும் நாம் சந்திக்கிறோம். ஆனால் அவைகளுக்கெல்லாம் 'பாரதம்' புதிதாகத் தெரியவில்லை! அதற்கான வரலாற்று இன மத ஆராய்ச்சிகளை நடத்தி இதனைப்பற்றி மார்க்சும் ஏங்கெல்சும் லெனினும் ஸ்டாலினும் ஏதாவது சொல்லி வைத்துள்ளார்களா என்ற முடிவினைக் காண அகில உலகக் கண்ணோட்டங்கள் எவையும் இன்றுவரை முயற்சி செய்யவில்லை. திருவாங்கூர் கொச்சிப் பகுதிகள் 'கேரளம்' என்று பெயர் பெற்றுக் கம்யூனிஸ்ட்களின் அணைப்பிலே இருக்கின்றன. ஆனால் 'திராவிடம் என்பது கற்பனை'-எனக் கணிக்கும் கம்யூனிஸ்ட் ஜீவானந்தங்களும் சிண்டன்களும் "கேரள"த்திற்கு இலக்கிய வரலாறுகளைத் தேடவில்லை; நினைக்கவே இல்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அகில இந்தியக் கணிப்பையும் அந்த ஏக இந்தியக் கொள்கை பல்வேறுஇனங்களைக் கொண்ட பெரும் பகுதியை இணைப்பதற்கான கருவியாக அமைவது சரியல்ல என்ற குற்றச்சாட்டினையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் எல்லோரும் ஒற்றுமைத் தத்துவம் பேசுவதிலே ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்லர்! வாழும் வடநாட்டினையும் வஞ்சிக்கப்படும் தென்னகத்தையும் ஒன்றாக நினைத்துக் கொள்ளும் அரசியல் குருடர்கள் எல்லாம் தங்களுக்கும் இனம், மொழி, கலை, இலக்கியம், தத்துவம், கொள்கை, இலட்சியம் இவைகளைப் பற்றியும் சரியான, தெளிவான அறிவுண்டு எனத் தெரிவித்துக்கொள்கிறார்கள். ஆனால் வடநாட்டையும் தென்னாட்டையும் இந்த பண்புகளின் அடிப்படையிலே நின்று ஒப்பிட்டால் ஒற்றுமை உண்டா, வேற்றுமை உண்டா என்று கேட்டால் 'ஒற்றுமைப் பண்பு தவழ்கிறது' என்று துணிந்து பேசும் அகில இந்தியக் கட்சிக்காரன் எவனையும் நம்மால் காணமுடிவதில்லை! விடுதலை பெற்ற வடநாடு ஏன் வளம் பெறுகிறது-ஆதிக்கம் பெறுகிறது, தென்னாட்டவரை அடக்கியாளும் வலிமை பெறுகிறது என்பன போன்ற சந்தேகங்களுக்கும், சரியான வினாக்களுக்கும் காங்கிரஸ்காரர்கள் விடை சொல்ல லாயக்கற்றவர்கள். பிரஜா-லோகியா-சோஷலிஸ்ட்களிடம் இருந்த இன வரலாற்று அறிவு எப்போதோ எதற்காகவோ பறிபோய் விட்டது! இறுதியாக நிற்கின்ற மிகப் பெரிய எதிர்க்கட்சி. கேரளத்தை ஆளுகின்ற கட்சி. கம்யூனிஸ்ட் கட்சி, இதனைப்பற்றித் தன் முடிவான கொள்கைகளை நிர்ணயிக்க நேரமில்லாமல் திண்டாடுகிறது-கேரளப் பாவைக்குத் தேவையான 'மேக்கப்' செய்வதிலே தன் காலத்தைக் கடத்துகிறது. வலிய இழுத்துக் கட்டப்பட்டிருக்கும் டில்லி ஆதிக்கம் எத்தனை நாளைக்கு நிலைக்கும் என்ற கேள்வியும் அதற்கான விடையும் பல பகுதிகளிலே உருவாகிவிட்டன. பாகிஸ்தானைப் பயங்காட்டி இங்கே பிழைக்க வேண்டிய நிலையிலே பல கட்சிக்காரர்கள் இருப்பதால்தான் பிரிவினை-விடுதலை என்ற பேச்சுக்கள் வரும்போதெல்லாம் பாகிஸ்தானைத் துணைக்கழைத்துக் கொள்கிறார்கள். சீக்கியர்கள், மராட்டியர்கள், குசராத்தியர்கள், நாகர்கள்—இவர்களுக்கெல்லாம் தனியாக வாழ வேண்டுமென்ற ஆசையிருக்கிறது. அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் மூவர்ணக்காரர்கள்! அவர்கள் விரும்புவது விடுதலை அல்ல; பிரிவினை அல்ல; தனி மாநிலம்'-என்று நமக்குச் சமாதானம் சொல்ல முன்வருபவர்கள் கம்யூனிஸ்ட்கள்! ஆனால் அதே நேரத்தில் நமக்குப் பதிலாக அமையும் 'தனி மாநிலம்' போன்ற செய்திகள் ஒரே இந்தியா-ஒரே பண்பு-பாரதப் பண்பு. பண்டிதர் பண்பும் அதுவே என்ற கற்பனை அரங்கையும் அடித்துத் துளாக்கிவிடுகின்றன.

கூடலரசன்

திராவிட முன்னேற்றக் கழகத்தை எல்லா நேரத்திலும் எதிர்க்கவேண்டுமென்று எண்ணங் கொண்டுள்ள ஏக இந்தியக் கட்சிக்காரர்கள்கழகத்தின் விடுதலை விருப்பத்தையும் அதன் ஆதரவில் வளருகின்ற நாடு மொழி என்ற உயர் எண்ணங்களையும் மதிப்பதற்கு மறுக்கிறார்கள்! ஆகஸ்ட் கலவரம் சுதந்திரப் போராட்டமாகியது போலவே-வெள்ளையன் பிடி அகன்றுவிட்டதாலேயே நாம் விடுதலை பெற்றுவிட்டதாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நம்மைக் கட்டாயப்படுத்துகிறார்கள்! காங்கிரஸ்காரர்களும் கம்யூனிஸ்ட்களும் ஒன்றாக நின்று பேசுகிறார்கள்; மற்றவர்களும் கைதட்டி வரவேற்கிறார்கள்! தென்னக மக்களை அடக்கி ஆளும் ஆசையில்லை என்றால் மொழி ஆதிக்கம்பற்றிய அகில இந்தியாக்களின் நல்லெண்ணம் என்ன? காங்கிரஸ்காரன் வட நாட்டிலே இருந்தாலும் சரி; தென்னாட்டிலேயிருந்தாலும் சரி; இந்திதான் இந்திய-பாரதப் பொது மொழி என்பதற்குச் சம்மதம் தந்தாகிவிட்டது! ஜனநாயக மொழிக் கொள்கை பேசுகின்ற காம்ரேடுகள் 'இந்தி' ஆதிக்கத்திற்கு மத்தியக்கமிட்டித் தீர்மானம் போட்டு தலையாட்டிவிட்டார்கள். தென்னாட்டில் எழுந்த மொழிப் பிரச்னைகளை துணைக் கண்டமெங்கும் உள்ள மக்கள் அறிவர் இந்தி எதிர்ப்பினை நல்லறிவாளர் செயல் அல்ல என்று மதிப்பிட்டவர் கம்யூனிஸ்ட்களின் இலக்கியக் கண்ணாடி யெனப்படும் ஜீவானந்தம்-'மொழிப் பிரச்னையில் நாம்' என்று நெஞ்சுயர்த்திப் பேசி இந்திவாலாக்களுக்கு தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் அடிமையான—சோரம் போன சோகச் செய்திகளைப் பல முறை பல இடங்களிலே தமிழகத்திற்குத் தெரிவித்துள்ளார்! இன்னொரு பொருளாதாரப் பேரறிஞர் பி. ராமமூர்த்தி 'ராஜாஜிக்கு'ப் பதில் கொடுத்து தன்னுடைய மொழிப் பிரச்னைப்பற்றிய திறன் காட்டினார். தாம்பரம் கிருத்துவக் கல்லூரியில் பேசும்போது எந்த இந்தி பொது மொழியாகும் தகுதி பெற்ற இந்தி என்று சொல்லமுடியாமல் திணறிப் போனார். தடுமாறினார். இவரைத்தான் 'மொழி வல்லுனர்' என்று சொன்னார், மொழித் திறம் படைத்திராமல் தன் தாழ் நிலையை ஒப்புக்கொண்ட சட்ட சபைக் கல்யாணசுந்தரம்! சென்னை சர்க்கார் கூட்டிய மொழிப் பிரச்னைபற்றிய கூட்டத்திற்கு கம்யூனிஸ்ட் தலைவர் வர மறுத்துவிட்டார். ராமமூர்த்தியைத்தான் அனுப்பி வைத்தார். அறிஞர் அண்ணாவும் மற்றவர்களும் அனுமதித்த காரணத்தால் அந்தக் கீச்சுக் குரல் சுந்தரரூபன் இந்தியை வரவேற்றுப் பேசினார்!

— அடுத்த இதழில் முடியும் —

பாயிரப்பெயர்கள்

திராவிட மொழிநூலார்
ஞா. தேவநேயப்பாவாணர் எம்.ஏ.,

பாயிரம் என்பது முகவுரை. அது ஒரு நூற்கு இன்றியமையாத தென்பது,

"எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க என்பது இலக்கணம். என்னை ?"

'ஆயிர முகத்தான்
அகன்ற தாயினும்
பாயிர மில்லது
பனுவ லன்றே.'

என்றாராதலின்.

"பாயிரமென்றது புறவுரையை. நூல் கேட்கின்றான் புறவுரை கேட்கின் கொழுச் சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறுபோல அந்நூல் இனிது விளங்குதலிற் புறவுரை கேட்டல் வேண்டும். என்னை ?

'பருப்பொருட் டாகிய
பாயிரங் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய
நூல் இனிது விளங்கும்.'

என்றாராகலின்.

"அப்பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும்போலவும், நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாகுத்தலின்; அது கேளாக்காற் குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சி புக்க மான் போலவும், மாணாக்கன் இடர்ப் படும் என்க" என்னும் நச்சினார்க்கினியர் உரையான் உணரப்படும்.

பவணந்தியார்,

"மாடக்குச் சித்திரமும்
மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்
கணியும்போல்-நாடிமுன்
ஐதுரையா நின்ற
அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார்
பெரிது."

எனச் சில உவமை வாயிலாகவும் பாயிரத்தின் தேவையை வற்புறுத்தினார்.

"அப்பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைத்து" என்றார் நச்சினார்க்கினியர். அதையே,

"பாயிரம் பொதுசிறப்
பெனவிரு பாற்றே."

என நூற்பா யாத்தார் பவணந்தியார்.

"அவற்றுட் பொதுப்பாயிரம்எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படும். அது தான் நான்கு வகைத்து.

'ஈவோன் தன்மை,
ஈத லியற்கை,
கொள்வோன் தன்மை,
கோடன் மரபென
ஈரிரண் டென்ப
பொதுவின் தொகையே.'

என்னும் இதனான் அறிக" என்பது நச்சினார்க்கினியம்.

நன்னூலார் இவற்றோடு நூலையுங் காட்டி,

"நூலே, நுவல்வோன்,
நுவலுந் திறனே,
கொள்வோன், கோடற்
கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும்
இவைபொதுப் பாயிரம்."

என நூற்பா இயற்றினார்.

இதனால், கற்பிக்கப்படும் நூல், கற்பிக்கும் ஆசிரியன், கற்பிக்கும் முறை, கற்கும் மாணவன், கற்கும் முறை ஆகிய ஐந்தின் இயல்பையும் விளக்குவது பொதுப்பாயிரம் என்றாயிற்று, இதன் ஐங்கூறும் எல்லா நூற்கும் பொதுவாயிருத்தலின்.

"இனிச் சிறப்புப் பாயிரமாவது தன்னால் உரைக்கப்படும் நூற்கு இன்றியமையாதது. அது பதினொரு வகையாம்.

'ஆக்கியோன் பெயரே,
வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே,
நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ
டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல்
பாயிரத் தியல்பே.'
'காலம், களனே,
காரணம் என்றிம்
மூவகை யேற்றி
மொழிநரும் உளரே.'

'இப்பதினொன்றும் இப்பாயிரத்துள்ளே (பனம்பாரனார் தொல்காப்பியத்திற்குக் கூறிய சிறப்புப் பாயிரத்துள்ளே) பெறப்பட்டன."

"நூல் செய்தான் (சிறப்புப்) பாயிரஞ் செய்தானாயின் தன்னைப் புகழ்ந்தானாம்,

'தோன்றா தோற்றித்
துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல்
தகுதி யன்றே'

என்பவாகலின்.

"(சிறப்புப்) பாயிரஞ் செய்வார் தன் ஆசிரியரும் தன்னொடு ஒருங்கு கற்ற ஒரு சாலை மாணாக்கரும் தன் மாணாக்கரும் என இவர்" என்பது தொல்காப்பியச் சிறப்புப் பாயிர நச்சினார்க்கினியர் உரைப்பகுதி.

சிறப்புப்பாயிரம் என்பது, ஒரே நூற்குச் சிறப்பாயிருந்து, அதன் ஆசிரியன் பெயர், அந்நூல் வந்தவழி, அது வழங்கும் எல்லை, அந்நூற்பெயர் முதலிய பதினொரு குறிப்பையும் ஒருங்கேயேனும், ஒன்றிரண்டு குன்றவேனுங் கூறி, அந்நூலைச் சிறப்பிப்பது (Foreword, Opinion, Editor's Preface etc.). மதிப்புரையெல்லாம் சிறப்புப்பாயிரமே.

ஒரு நூலாசிரியன் தானே தன் நூலைப் புகழ்தல் [illegible] சிறப்புப்பாயிரஞ் [illegible] ராயிருத்தல் [illegible] தொன்றுதொ[illegible] செய்யத்த[illegible] பிட்டார் நச்சி[illegible] உரையாசிரியனை[illegible]

"தன்னா சிரியன்,
தன்னொடு கற்[illegible]
தன்மா ணாக்கன்,
தகுமுரை காரனெ[illegible]
றின்னோர் பாயிரம்
இயம்புதல் கடனே"

என்றார் பவணந்தியார்.

ஆயினும் கடவுள் வணக்கம், அவையடக்கம், நூற்பொருள், நூல் வந்த வழி, நூற்பெயர் முதலியன நூலாசிரியன் கூறுவதே பொருத்தமாதலானும், அவை எவ்வகையினும் தற்புகழ்ச்சிக்கு இடந்தராமையானும், அவற்றை நூலாசிரியன் கூறுவது தக்கதென்று கொள்ளப்பட்டுத் தற்சிறப்புப் பாயிரம் எனப் பெயர் பெறும்.

"வணக்கம் அதிகாரம்
என்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்."
"தெய்வ வணக்கமும்
செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது
தற்சிறப் பாகும்."

என்பன காரிகையுரை மேற்கோள்.

சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்திற்குச் செய்த பாயிரமும், கம்பர் தம் இராமாவதாரத்திற்குச் செய்த பாயிரமும், தற்சிறப்புப் பாயிரத்திற் கெடுத்துக்காட்டாம். இளங்கோவடிகள் மங்கல வாழ்த்துப் பாடலும் அது.

— 15-ம் பக்கம் —

வருவாய் தமிழ்மகனே!

எடுப்பு

தமிழ்மகனே வருவாய்-உந்தன்
தாய்மொழி காக்க வழிஅறிவாய் (தமிழ்)

தொடுப்பு

அமிழ்தினும் இனிது உன்மொழியே-அதை
அழித்திடத் துடிக்குது வடமொழியே (தமிழ்)

முடிப்பு

திகழும் தமிழ்மொழித் திறத்தை மறந்து
தீய வடமொழி தானே புகுந்து
பகலை மாய்க்க முயலும் இரவாய்
பாய்ந்தே விரைந்து வருகுது பாராய் (தமிழ்)

அண்டிய பேரை ஆதரித் ததனால்
ஆயிரம் துன்பம் அனுபவித் தோய்ந்தோம்
பண்டைய நாளில் வடமொழி தானே
பயந்தே வாழ்ந்த நிலையினை உணர்வாய் (தமிழ்)

அறிவெனும் சுடரினைத் துணையாய்க் கொண்டு
அழகெனும் நெய்யொடு வலிவெனும் திரிகண்டு
செறிந்திடும் ஒளியைச் சேர்த்துமே தந்து
சேய்மையோர் மொழியைத் தீக்கிரை யாக்கு (தமிழ்)

— தமிழ்ப்பித்தன் —

தென்னிலங்கையும் மனித இன நாகரிகமும்

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி.

ரிக
நில
தின்
லம்.
லை உலகின்
ரு தியோட்டம்.
னெறிகளே
ன் உயிர்ப்பு
டலம். இம்
று மண்டலங்
க்கும் நடுமய
அமைந்திருப்
இலங்கையே
ர்பது உலகப்
தை ஒரு
வ பார்த்து,
ன் நில இயலேயும் வரலாற்றை
ரு தடவை புரட்டி நோக்கினால்
தெரியவரும்.

லக நாகரிகத்தில் இலங்கைக்
இடம், இலங்கை சூழும்
லங்களுக்குரிய இடம் ஆகிய
றை உள்ளவாறறிய இன்றைய
கச் சூழ்நிலை ஒரு பெருந்தடை
தும். ஏனெனில் இலங்கையும்
மண்டலங்களும் புதிய மேலை
ப்பா நீங்கிய பழமை சான்ற
கங்களையும் இரண்டாயிர
பிர ஆண்டுகளுக்கு மேற்பட்ட
இருள் அறியாமையிலும் அறை
அடிமையிலும் உழன்று,
ாதுதான் அந்த இருவகை
யிலில் வந்து நிற்
க்கு ஓரம் புத்
ாலும்,
காணப்
விந்து
டு

இதிகாசங்களை
எண்ணியவர்களும் மிகப்பலர். ஆனால் அது வரலாற்றுக் காலத்துக்கும் இதிகாச காலத்திற்கும் எவ்வளவு முற்பட்ட மிகப் பழைய மரபின். காலச்சிதைவு என்பது உலக அறிஞரிடையே படிப்படியாகத்தான் உணரப்பட்டு வருகிறது. மிகப்பழைய உருவில் அது இராமன் கதையு
லை. இராமாயணம் என்பது அதன்
யருமல்ல. அது இதிகாசங்களையும்
லகக்கதைகளையும் உள்ளடக்கிய
பழங்காலப் பெருங்கதை. அதன்
வரலாற்று மயம், கதை முதல் நாய
கன் இலங்கையிலிருந்து கொண்டு
ந்தம் கடந்த தென்னகப் பரப்பு
ழுதும் இன்றைய கடல்கடந்த
மாநிலங்கள் பலவும் ஒருங்கிய ஒரு
நடைக்கீழ் ஆண்ட தொல் பழங்
லப்புகழ்ப் பேரரசன் இராவணன்.
அவன் நிலையில் முதிர்வுற்று வளர்ந்த
லகின் முதல் மீக்கட்பொருள்
ப்பியமே இராமாயணம் என்ற
யரால் சில நாளாக வழங்கும்
ப் பெருங்கதை அல்லது
ராவண காவியம். அதன் கருப்பொருள் இராவணன் வீழ்ச்சியன்று, இராவணன் வெற்றிப் பெறுவீறு ஆகும்.

இராமாயண காலத்தில் சிந்து, கங்கைவெளிநாகரிக மனிதர் வாழும் பரப்பாயில்லை. மனித நாகரிகம் அன்று விந்தம் கடந்து பரவவில்லை. அது மட்டுமன்று. இராவணன் ஆட்சிக் காலத்திலேயே சேர சோழ பாண்டியர் என்ற தமிழ் மூவேந்தரும் ஆண்டதாக இன்றைய சமஸ்கிருத ராமாயணம் கூறுகிறது. ஆனால் உண்மையில் இராவணன் காலத்தில் 'மூவரசன்' உண்டு; 'மூவரசர்' கிடையாது. அவன் பேரரசாட்சி சிதறுண்ட பின்பே 'மூவனு'கிய அவன் ஆட்சி மூவராட்சியாயிற்று. இது மட்டுமோ? மூவர் ஆட்சிக்கூடத் தொடக்கத்தில் சங்க காலத்திய 'குட்டித் தென்னக' ஆட்சியல்ல. அது இன்றையத் தென்கிழக்காசியா பகுதி முழுவதையும் உட்கொண்ட ஓர் உலகப் பெரும் பரப்பாகும். இப்பரப்புக் கடலில் பிரிக்கப்பட்டுச் சிதறிய பின்பே, மூவன் மரபினராகிய மூவரும் காடாய்க் கிடந்த இன்றையத் தமிழகத் தலை நிலத்தையும் தென்னகத்தையும் இறுதியில் கங்கை சிந்து மாநிலங்களையும் வெட்டித் திருத்தி மனிதர் வாழும் நாடாக்கினர். சங்க காலத்திலும் அதன் பின்னும் இம்மாநில ஆட்சிக் கூடம் குறுகிற்று.

தமிழர் தம் பழைய வாழ்வின் வீடு மறந்தனர். தம் தாய் நிலம் இலங்கையே என்பதையும் மறந்தனர்.

ஆனால் இலங்கை தமிழர்க்கு மட்டும் தாய் நிலம் ஆகும்.

தென்கிழக்காசியாவெங்கும் இன்று பேரளவில் தமிழரைக் காணலாம். அத்துடன் சிங்களர், மலாய் மக்கள், பர்மியர், சீனச் சாவகர், அராபியர் ஆகிய பிற பேரினங்களையும் காண்கிறோம். இவ்வெல்லா இனங்களும் ஒரே தாய்ப் பேரினத்தின் கிளைகளாகிய சேய் இனங்களே. இதுவும் இப்போதுதான் உணரப்படத் தொடங்கியுள்ளது. தென் கிழக்காசியா முழுவதும் உள்ள இனங்களின் நாகரிகம், பண்பாடு, கலை, நாகரிகம், பழக்க வழக்கங்கள் ஆகியவை மிகப் பேரளவில் ஒன்றுபட்டிருப்பது கண்டு உலகப் பேரறிஞர் வியப்படைகின்றனர். அவை யாவும் ஒரே பேரினத்தின் பிரிவுகள் என்ற எண்ணமோ, மனித நாகரிகத்தையே தோற்றுவித்த தாய்ப் பேரினம் அது என்பதோ ஆராய்ச்சிப் போக்கு சுட்டிக் காட்டுப மெய்ம்மைகள் வருங்கால ஆராய்ச்சிகளே உறுதிப்படுத்த வேண்டியவை. ஆனால் இலங்கையின் முக்கியத்துவம் சுட்டிக் காட்டும் முறையில் அவற்றுட் சிலவற்றை இங்கே குறிப்பிடுவோம்.

இலங்கையில் இன்று இருமொழியினங்கள் வாழ்கின்றன ஒன்று சிங்களவ இனம். மற்றது தமிழினம். இரண்டும் இலங்கைக்கு வெளியேயிருந்துவந்த இனங்கள் என்று இன்று பல வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றனர். தென்கிழக்காசியாவெங்கும் இரண்டு இனங்களுக்கும் உள்ள தொடர்புகளை நோக்கினால், இக் கருத்து முற்றிலும் தவறு என்பது தெளிவாகும். தமிழர் இன்று தென்கிழக்காசியப் பகுதிகளெங்குமே காணப்படுகின்றனர். இது ஓரளவு குடியேற்றத்தின் விளைவானாலும், முற்றிலும் அவ்வழி சார்ந்ததல்ல என்பதைப் பண்டை வரலாறும் கல்வெட்டுக் கூறும் மரபுகளும் காட்டும். இலங்கையின் மற்ற இனமாகிய சிங்களவ இனம் இன்று தென்கிழக்காசியாவின் பிற பகுதிகளில் தொடர்பு கொண்டிருக்கவில்லை. ஆயினும் தமிழரைப்போலவே சிங்களவரும் பழந்தொடர்புடையவரே என்பதை வேறுபல பழமைச் சின்னங்கள் காட்டுகின்றன.

சிங்களவர் என்று சொல்லுக்கு வேறு என்ன விளக்கம் தரப்பட்டாலும், 'சிங்கம்' என்பது அச்சொல்லுக்கு மூலமான தொடர்புடையது என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது. சிங்களமன்னர் தங்களைச் சிங்க மரபினர் என்று மிகவும் பெருமையுடன் கூறிக்கொண்டனர். ஆனால் பர்மிய அரசரும் தங்கள் மரபு சிங்கமரபு என்றே குறித்துக் கொண்டனர். இவ்வகையில் அவர்கள் சிங்களவரைத் தாண்டி மேற் சென்றனர் என்று கூறவேண்டும். ஏனெனில் அவர்கள் முதல் அரசனைப் பற்றிய வரலாறு அவன் ஓர் அரசனின் செல்விக்கும் ஒரு சிங்கத்துக்குமே பிறந்தவன் என்று கூறுகிறது.

சிங்கம் என்பதற்குரிய இன்னொரு சொல் சீயம் என்பது. இது 'சீயம்' நாடு அல்லது தாய்லந்தின் பெயர் ஆகும்.

மலாயாவின் தென்கோடித் தீவு 'சிங்கப்பூர்' என்று பெயர் பெற்றிருப்பதை யாவரும் அறிவர்.

சிங்கத்தைப் பற்றிய இப்பழைய மரபும் 'சிங்கம், சீயம்' ஆகிய அது குறித்த சொற்களும் தென்கிழக்காசியாவெங்கும் பரவிய ஓர் இன மரபையும் ஒரு பழமை வாய்ந்த மொழி மரபையும் சுட்டிக்காட்டுபவை ஆகும். இச்சொல் ஒன்று தமிழ்ச் சொல்லாயிருக்கவேண்டும், அல்லது சமஸ்கிருதச் சொல்லாய் இருக்க வேண்டும், ஆனால் 'சிங்கம், சீயம்' என்ற வடிவங்கள் அது தமிழ்ச் சொல்லே என்பதை வலியுறுத்துகின்றன.

இலங்கையில் வாழும் மொழியினங்களிரண்டில் இவ்வாறு தமிழினம் இன்றுவரை தென்கிழக்காசியாவெங்கும் வாழ்ந்து வருகின்றது சிங்கள இனமும் தமிழ் மொழியும் எங்கும் பழந் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இலங்கைக்குரிய தமிழ்,

— 15-ம் பக்கம் —

வாழ்த்து!

சென்னை மாநகரின் தென்பகுதியிலிருந்து தங்களால் வெளியிடப்பெறும் "தென்றல்" என்னும் செந்தமிழ் வார இதழினை நான் பெற்றுப் படிக்க முயலும்போதெல்லாம்,

"கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்தத கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடைமலர்ந்தசுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே,"

என்னும் வள்ளலாரின் அருந்தமிழ்ப் பாடலே என் நினைவுக்கு வந்து என் உள்ளத்தை அகமகிழ்விக்கும் வள்ளலார் தமது மென்மையான இனிமையான சொற்களால் புரட்சிக் கருத்துக்களை நாட்டில் புகுத்தி மக்களை விழிப்புறச் செய்தார். தங்கள் தென்றல் இதழும் தம் பெயருக்கேற்ப இனிமையான அழகிய செந்தமிழ்ச் சொற்களால் முன்னேற்றக் கருத்துக்களையெல்லாம் சிறிதும் தயங்காமல் எடுத்துக் கூறி தமிழர்களைத் தட்டி எழுப்புகின்றது. தங்கள் வார இதழால் நம் நாட்டிலே பல கவிஞர்கள் தோன்றியிருக்கின்றனர். தங்கள் வார இதழில் இருபதாம் நூற்றுண்டின் எழுச்சிக் கருத்துக்களையும் சங்க காலத்தின் ஐந்திணை நெறிகளின் சிறப்பியல்புகளையும் சாதாரண மக்களும் செவ்விதின் உணர்ந்துகொள்ளுகின்றனர்.

"குன்றலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே"

என்று நம் நாட்டுக் கவிஞர் ஒருவர் கூறியிருத்தற்கேற்ப, தங்கள் "தென்றல்" மக்களை உறங்க வைக்கவில்லை. விழிப்புணர்ச்சியைத் தந்து நம் நிலையினை எண்ணிப்பார்க்கத் தூண்டுகிறது. நல்ல நம் நாட்டிலே வீசும் இயல்பினை யொத்துத் தங்கள் தென்றல் இதழும் நம்நாட்டு மக்களின் உள்ளக்கொதிப்பினை ஆற்றி அவர்களின் கடமையை அறிவிக்கும் வகையிலே அரிய செய்யுள் மூலமாகவும், சிறந்த கட்டுரை வாயிலாகவும், சரிதைகள் நாடகங்கள், கற்பனைக் கதைகள் முதலியவைகளைக் கொண்டும் தம் கடமையைப் பலரும் வியக்கும் வகையிலே புரிந்துவருவது பெரிதும் பாராட்டற்குரியதாகும். ஆறும் ஆண்டின் துவக்கமாகிய இந்த இதழ்ப் பகுதியிலிருந்து மேலும் பலப்பல பதிய கருத்துக்கள் வெளிவரும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இக்கால இளைஞர்களின் உள்ளத்திலே இருந்து எழும் புயற்காற்று, தென்றல் ஆசிரியரின் அறிவுரைகளால் அமைதியுற்று நாட்டுக்கு நல்ல பணியினைச் செய்து வருகின்றது. ஆதலின் தென்றல் இதழினையும் அதன் ஆசிரியர் கவிஞர் கண்ணதாசனரையும் அவர்தம் குறிக்கோளுக்கேற்ப ஒழுகிவரும் பிற அன்பர்களையும் நான்உளமார வாழ்த்துகிறேன்.

—பேராசிரியர் திரு. மயிலை. சிவமுத்து

★ தமிழில் நூல்கள் ★

இந்தியாவில் புத்தகங்கள் வெளியீடு மிகவும் குறைவு; மிக மிகக் குறைவு. நம்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை மிகக் குறைவு என்பது உண்மை. படித்தவர்களின் தொகையோடு புத்தகங்களின் வெளியீட்டை ஒப்பிட்டுப் பார்த்தால், அதுவும் மிகமிகக் குறைவு.

அண்மையில், கல்கத்தாவிலிருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது. மத்திய அரசினர் கல்கத்தாவில் இருக்கும் தேசிய நூல் நிலையத்திற்கு ரூ.17,000 கொடுத்து, வங்காளி மொழியில் வெளியாகியிருக்கும் நூல்களை வாங்கி, கிழக்குப் பாகிஸ்தான் அரசினருக்கு வழங்கச் சொன்னார்கள். ஆனால் அத்தொகையில் ரூ. 6800 திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது. காரணம், வாங்குவதற்குப் புத்தகங்கள் இல்லை! வங்காளி மொழியில் மட்டும் அல்ல, இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இந்த நிலைதான் என்று தயங்காமல் கூறலாம்.

கதைப் புத்தகங்கள் வெளியிடுவதில் உள்ள ஆர்வத்தில் 10 சதவிகிதம் இதர துறைகளில் புத்தகங்கள் வெளியிடுவதில் இருக்குமேயானால், இந்நிலை ஏற்பட்டிருக்காது. பொருளாதாரம், அரசியல், வரலாறு, விஞ்ஞானம், உளநூல், விவசாயம் முதலிய துறைகளில் வெளிவரும் நூல்களை நாம் விரல்விட்டு எண்ணிவிடலாம். இத்துறைகளில் எழுதுவோர் குறைவு என்பதை ஒப்புக்கொண்டாலும், எழுதுபவர்களின் நூல்களைப் பதிப்பகங்கள் வெளியிடத் தயங்குகிறார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். காரணம் இவற்றை வாங்குவோர் மிகமிகக் குறைவு என்பதேயாம். ஆகவே பதிப்பகங்களும் இக்குற்றச்சாட்டுக்கு இலக்காகின்றன.

விஞ்ஞான, பொருளாதார, அரசியல் நூல்களை எழுதுவோரைப் பதிப்பகங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பிரபலமான எழுத்தாளர் வீட்டு வாசலில் நின்று அவர்கள் எழுதும் நூல்களை வெளியிடுவதில் போட்டா போட்டி போடுவதைவிட பெயர் பெறாத ஓர் எழுத்தாளர் எழுதும் மேற்கூறிய துறையில் உள்ள நூல்களை வெளியிடுவதற்கு முன்வர வேண்டும். இதைத் தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சிக் குழுவினர் மனத்தில் கொள்ளவேண்டும்.

இந்நிலை தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் முற்றிலும் உண்மை என்று தயக்கமின்றிக் கூறலாம். இளம் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பதிப்பகங்கள் சிலவே. எப்படியோ (?) புகழ்பெற்றுவிட்ட எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதில் முனைகிறார்களே தவிர, இளம் ஆசிரியர்களின் எழுத்துக்களைப் பயன்படுத்த முனைகிறார்களில்லை. உண்மையைச் சொல்லப் போனால் இளம் எழுத்தாளர்கள் எழுதும் நூல்களிற் சில, மிக நன்றாக இருக்கின்றன; சிலருடைய முதல் முயற்சி என்றால், நம்பமுடியாத அளவிற்கு, நன்றாக அமைகின்றன. ஆகவே பெரிய எழுத்தாளர்கள் நூல்கள் பத்து வெளியிட்டால் இளம் எழுத்தாளர்களின் நூல்கள் நான்கு வெளியிடுக என வேண்டுகிறோம்.

குழந்தை இலக்கியம்மிகக் குறைவாக இருக்கிறது. மேலும், கதைகளும், நாவல்களும், வெளியிடுவதுடன் அல்லாமல், அறிவு நூல்களையும், விஞ்ஞான சாதனைகளையும், மேனாட்டு மக்களின் முன்னேற்றத்தையும், சிறுவர்களுக்கு எளிய நடையில் கதைபோல் கூறும் நூல்கள் நிறைய வெளி வரவேண்டும்.

நமது நாட்டில் இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில், பல்கலைக் கழகங்களில் தாய்மொழி போதனை மொழியாக ஆகிவிடும். தாய் மொழிகளில் அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் புத்தகங்கள் வெளியீடு மிகவும் குறைவாக உள்ள இந்த நேரத்தில், இன்னும் ஐந்து, பத்து ஆண்டுகளில் தாய்மொழி மூலம் பாடங்களைக் கற்பிக்கும் முறை தோன்ற இருக்கிறது. இப்போது முதலே வெளியீட்டகங்கள், பல்கலைக் கழகத்துத் தரத்திற்கேற்ப நூல்களை வெளியிடுவதில் முனைய வேண்டும். கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களின் துணை கொண்டும், தமிழ்ப் பற்றுக் கொண்டோர் துணை கொண்டும், இத்தகைய நூல்களை வெளியிடுவதற்கான குழுக்களை ஒவ்வொரு பதிப்பகத்தாரும் அமைத்து, ஆய்ந்து, ஆராய்ந்து, பல்கலைக் கழகங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் நூல்களை எழுதச் செய்து, வெளியிடுதல் வேண்டும்.

இந்தியாவில் ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு எல்லா மொழிகளிலும் பாடங் கற்பிக்க நேரிட்டால், சுமார் ஐம்பது இலட்சம் புத்தகங்கள் எல்லா இந்தியமொழிகளிலும் தேவைப்படும். ஒவ்வொரு இந்திய மொழியிலும் 3 இலட்சம் புத்தகங்கள் தேவைப்படும். இந்த ரீதியில் நாம் போனால் ஐம்பது இலட்சம் புத்தகங்கள் எழுதி முடித்து, வெளியிட 275 ஆண்டுகள் பிடிக்கும்! இந்த ஐம்பது இலட்சம் புத்தகங்களில ஒவ்வொன்றிலும் ஆயிரம் 'காப்பி'கள் அச்சடிக்க, சுமார் ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும்!

புள்ளி விவரங்கள் பயங்கரமாகத் தானிருக்கின்றன. ஆனால் முயன்றால் முடியாததல்ல! இப்போது பிடித்தே, இந்தத் துறையில் முயற்சிகளைத் தொடங்க வேண்டும். பல்கலைக் கழகத்தாரும், அரசியலாரும் திட்டவட்டமாக இன்னும் இத்தனை ஆண்டுகளுக்குள் நாங்கள் தாய்மொழியைப் பயிற்சி மொழியாக ஆக்கப் போகிறோம் என்று தெரிவிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இத்துறையில் நல்ல முயற்சிகள் உருவாகும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

பதிப்பகங்களுக்கும் இப்பணியில் ஒரு பெரும் பங்கு உண்டு. அவர்களும் இப்போது பிடித்தே இத்துறையில் முதல் முயற்சியைத் துவங்க வேண்டும். அறிவு நூல்களை வெளியிடுங்கள் என்று கேட்டுக்கொள்வோம்!!

ஆங்கிலம் படித்துத் தமிழிலும் எழுதத் தெரிந்த பெருமக்கள்தமிழில் இத்தகைய நூல்களை – அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், பௌதீகம் போன்ற துறைகளில்– எழுத முன் வர வேண்டும். எழுத அவர்களுக்கு அச்சம் இருக்குமேயானால், தமிழ்ப் பேராசிரியர்களின் துணை கொண்டு, கூட்டு முயற்சியாக எழுதலாம்!

இந்தத் துறையில், ஆசிரியர்கள், பல்கலைக் கழகங்கள், அரசினர், வெளியீட்டகங்கள், நூல் நிலையங்கள், படிப்பவர்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். கடமையைச் செய்வார்களா?

-நா. ஜகந்நாதன் எம். ஏ.

★ ஒருநாள் கழிவது...

சூழலும் உலகுடன் போட்டி போடுவதுபோல் எப்பொழுதும் தன் போக்கிலேயே விரைந்து ஓடிக்கொண்டிருப்பது காலம். யாருக்காகவும், எந்த நிகழ்ச்சிக்காகவும் அது தன் வேகத்தைக் கூட்டுவதோ, குறைப்பதோ கிடையாது. ஆனால் உலகியலிலே உழன்று, உழன்று அன்றாடம் பற்பல உணர்ச்சிகளுக்கிடையே தத்தளிக்கும் மனித இனத்தின் அங்கங்களாகிய ஒவ்வொருவருக்கும் அவரது உள்ள நிலையைப் பொறுத்தும், சுற்றுப்புறம், சூழ்நிலைகளைப் பொறுத்தும், காலம் ஊர்வதுபோலவும், ஓடுவது போலவும் தோன்றும்.

தான் எழுதிய தேர்வின் முடிவு நாளை விடிந்தால் தெரியும் என்று அறிந்த மாணவனுக்கு அந்த இரவு விடியா இரவாக நீண்டுகொண்டே செல்வது போல் தோன்றும். மணநாள் குறிக்கப்பட்ட மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் இரவெல்லாம் தூக்கமின்றி, நாளொன்று கழிவது ஆண்டொன்று கடந்தது போல் தோன்றும். மணம் முடிந்த முதலிரவின் மறுநாள் விடிந்ததும். 'இரவு போய்விட்டதா, இவ்வளவு விரைவிலே!' என அவர்கள் ஏங்குவதும் உலகம் கண்ட உண்மை. அது மட்டுமன்று! மணந்து மனையறம் மேற்கொண்ட காதலர் பிரிவிலும், காலம் நீண்டு வளரும் என்பது வள்ளுவர் வாய்மொழி.

'இல்லறம் நல்லறமாக, இன்றியமையாது இருப்பதுபொருள்' என உணர்ந்த தலைவன், பொருள் ஈட்டல் கருதித் தலைவியை தேற்றுத்தான் பிரிந்து சென்றான். விளக்கு எப்பொழுது அணையும் என எதிர்நோக்கி இருக்கும் இருளைப் போல, தலைவனின் பிரிவை எதிர்பார்த்திருந்து தலைவியைத் தழுவிக்கொண்டுவிட்டது பசலை நோய். தலைவனுடன் கூடி இருந்த காலத்திலே, அவன் தழுவலில் சிறிது நெகிழ்ச்சி தோன்றினாலும் உடனடியாகத் தான் அவ்விடத்தில் ஆட்சி செலுத்தத் துடிக்கும் பசலை நோய் அல்லவா, அது? தலைவன் அவளைப் பிரிந்து தொலைதூரம் சென்றுள்ளான் என்றால் அது வாளா இருக்குமா? அவளது அங்கங்கள் ஒவ்வொன்றிலும் நீங்காமல் நிறைந்துவிட்டது, நேற்று அவன் அவளைப் பிரிந்த பொழுதிலேயே. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலராம் நோய் தந்த தொல்லை கொஞ்ச நஞ்சமன்று! அப்பப்பா! அதை வார்த்தைகளால் வடிக்கவே முடியாது. அது விளைத்த இன்னல்களைக் கொண்டு நோக்கும்பொழுது, ஒரு நாள் கழிந்ததாகத் தெரியவில்லை. ஏழு நாட்கள் துன்புற்றாற்போல் தோன்றியது அவளுக்கு. ஒருநாட்பொழுதே இவ்வாறு என்றால், மீதமுள்ள நாட்களை அவள் எவ்வாறு கழிக்கப் போகிறாளோ! பாவம்.

> "நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
> எழுநாளேம் மேனி பசந்து"

—குறள் 1278.

எப்படியோ நாட்கள் பல கழிந்தன. தன் தலைவன் திரும்பி வரப் போகிறான் என்ற செய்தியொன்று வருகிறது அவளுக்கு. கேட்டவுடன் அவள் மனம் எல்லை இல்லாத உவகையில் திளைத்தது. தலைவன் வந்ததும், 'எப்படி, எப்படிப் பேசவேண்டும், என்னென்ன செய்ய வேண்டும்' என்றெல்லாம் திட்டமிட்டாள். நாள் முழுவதும் இவ்வாறு மனக்கோட்டை கட்டிக்கொண்டே இருந்ததால் அதுவும் அலுத்து விட்டது அவளுக்கு. இப்பொழுதே வந்து விட மாட்டானா தன் த[...] என ஏங்கினாள். பா[...] படுக்கை மு[...] அமைதி இ[...] பொழு[...] இருந்[...] எண்[...] மாக[...] நெஞ்[...] தூக்கத்தையும் போக்கிவிட்டது. முன்பு விரகத்தால் பசந்த அவளது உடலின் வாட்டத்தால் காலம் ஊர்வதுபோல் தோன்றியது. ஆனால், இப்பொழுதோ, ஏக்கத்தால் வாடிய அவள் உள்ளத்திற்கு அவ்வாறு தோன்றியது. நாளொன்று கழிவது ஏழு நாட்கள் கரைவன போலவே இப்பொழுதும் உணர்ந்தாள்.

> "ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்
> வருநாள் வைத்(து) ஏங்கு பவர்க்கு."

—குறள் 1269.

ஊர்ந்து செல்லுங் காலம் ஓடி மறைய உற்றதொரு வழி என்னவென்று யாரே உரைக்கற்பாலர்! பாவம். காதலன் பிரிவு முதல் திரும்பி வரும் வரையிலும் நாளெல்லாம் வாடவேண்டியவள்தான் காதலி.

-பனை. சண்முகம்.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
அ: வ. சங்குப்பிள்ளை, திண்டுக்கல்ரோடு, மதுரை.

பதவி கொடு!



நகராட்சிகளில்
நல்ல தமிழ் வழங்க...

மிழர் அன்றிருந்த நிலை வேறு-இன்றிருக்கும் நிலை வேறு. தமிழ் ழியின் நிலையும் அப்படியே. ழ்ப் புலவர்களின் நிலையும் தகையதே. இதை எண்ணும் பாழுது ஒவ்வொரு தமிழ் நெஞ்ச ம் இன்னலுறும்.

ணிக்கும் பாவலர்களாக- ...வர்களாக- ...சிறந் ...தூது ...ஏது ...க- ...க- ...க- ...னி ...டி ரக்கு ...களாக- நத்தில் நகை விளைத்து டும் மறவர்களாக, அக் வர் பெருமக்கள் வாழ்ந்த னல் இன்றோ...எழுதவே கூசுகின்றது.

தமிழ் கற்பவரை இரு ...த்தலாம். ஒரு வகை னர், ...த் தமிழோடு ஆங்கிலத் தையும் கற்கும், பி. ஏ.; பி. ஓ. எல்.; எம். ஓ. எல்; எம் ஏ. என்ற வகை யினர். இந்த வகையினரோடு, பி. ஏ. (ஆனர்ஸ்) தமிழ்ப் பட்டம் பெறுபவருமுண்டு. இவர்கள் அத் துணை பேரும், கலைக் கல்லூரி ளிலோ (Arts Calleges) அல்லது ல்கலைக் கழகங்களிலோ (Univer-ties) படித்துப் பட்டம் பெறுபவ ாகும்.

இன்னொரு வகையினர். தனித் தமிழ்க் கற்பவர்களாகும். இப்பிரிவி னருக்குச் சென்னைப் பல்கலைக் கழ கம் '**வித்துவான்**' என்ற பட்டத்தை யும்-அண்ணாமலைப் பல்கலைக் கழகம் '**புலவர்**' என்ற பட்டத்தையும் வழங்குகிறது. தமிழ்மொழி ஒன்றைத் தவிர வேற்று மொழி ஒன்றையும் இவர்கள் கற்க வாய்ப்பில்லை, கல்லூரி களில்.

தற்காலச் சூழ்நிலையில், ஆங்கில மொழியோடு தமிழ் கற்றவருக்கு இருக்கும் மதிப்பு வேறு. தனித்தமிழ் கற்றவர்களுச்கு இருக்கும் மதிப்பு வேறு. ஆங்கிலத்துடன் தமிழ்மொழிப் பயிற்சி உடையவர்கள் அரசாங்கப் பணிமனைகளில் எதில் வேண்டுமானு லும் வேலைக்கிருக்கலாம். **தனித்தமிழ் கற்றவர்கள் தமிழாசிரியர் வேலை ஒன்றைத் தவிர வேறு பணி ஒன்றற்கும் செல்லமுடியாது.** அப்பணி ஒன்றும் இன்றைய நிலையில் கிடைப்பதரிதாய் உள்ளது. இவர் களுக்காகப் போராடுபவர்கள் யாருமேயில்லையா? இவர்கள் குறை தீரும் நாளே கிடையாதா?

தமிழ்நாட்டில் மட்டும், தனித் தமிழைக் கற்பிக்கும் கல்லூரிகள் எட்டு இருக்கின்றன இந்த எட்டுக் கல்லூரிகளிலிருந்தும் ஆண்டு ஒன் றுக்கு நானூறு (400) வித்துவான் கள் வெளியேறுகின்றனர். இவர்கள் நீங்கத் தனியாகத் தமிழைப் படித்துப் (Private Candidates) பட்டம் பெறுவோர் தொகை நூறுக்கு மேலி ருக்கும். அத்துடன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'புலவர்' பட்டம் பெறுவோர் ஏறக்குறைய நூறிருக்க லாம்(100). எனவே, தனித்தமிழைப் படித்து வெளிவருவோர், ஆண் டொன்றுக்கு, ஏறக்குறைய ஆறு நூறு (600) பேர் ஆகின்றனர்.

இந்த ஆறுநூறு பேரும் ஆசிரியத் தொழில் செய்யத்தான் தகுதியுடைய வர்கள் என அரசியலார் மதிப்பிட்டு வைத்திருக்கின்றனர். வேறு பணி ஒன்றற்கும் இவர்கள் தகுதியுடைய வர்கள் அல்லர் எனும் தவறான கருத்துத்தான் இன்றையநாள் வரை யிலும் ஆட்சியாளரிடம் வேரூன்றி யிருக்கிறது. இக்கருத்து மாறும் நாள் எந்த நாளோ?

தற்பொழுது தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள் (High Schools) எதிலும், தமிழாசிரியர் பணிக்கு இடம் காலியில்லை இது திட்டமான முடிவாகும். இவ்வாண்டு, வித்துவான் தேர்வு பெற்று வெளி வரும் அறுநூறு பேரும் வேலைச்கு எங்கு செல்வது? தனித் தமிழ் கற்ற தமிழ்ப் புலவர்களுக்கு, தமிழகப் பள்ளிகளிலேயே வேலையில்லை யெனில், மற்ற நாடுகளிலா வேலை கிடைக்கப் போகிறது? இதைக் கன விலும்கூடக் கருதிப் பார்க்க முடி யாது. அரசாங்கம் ஆவன செய்ய முன் வருமா?

ஆண்டாண்டு தோறும் ஆறுநூறு பேருக்குத் தமிழாசிரியர் வேலை கொடுக்க வேண்டுமெனில், ஒவ் வொரு ஆண்டும். முந்நூறு உயர் நிலைப் பள்ளிகளைப் புதிதாக அரசாங் கம் திறந்தாக வேண்டும். இதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா? என்பது ஐயத்திற்கிடமான பிரச்சினை யாகும். அப்படியே செய்துகொண்டு வந்தால், முடிவு நிலை என்னவாகும்? என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். தமிழகத்தின் தேவைக் குப் போதுமான பள்ளிகளைத் திறந்த பிறகு, ஆண்டுதோறும், பட்டம் பெற்று வெளி வரும் புலவர்களுக்கு வேலைக்கு என்ன செய்வது? 'தமிழாசிரியர் வேலைக்குத்தான் வித்துவான்கள் தகுதியுடையவர்கள்' என்ற நிலை நீடித்தால்...புலவர்கள் கதி என்னாவது? என்பதை அரசிய லாரும் பொதுமக்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்ப் புலவர்களுக்காக மன மிரங்கி, அரசாங்கம் ஒரு செயலை மட்டும் செய்யலாம். அஃதாவது, தமிழ்நாட்டில், தமிழ் மொழிக்காகப் பணி புரியும் தமிழ்க் கல்லூரிகள் அனைத்தும் நடைபெறாமல் தடுக்க வேண்டும். தடுக்க வேண்டுவ தென்ன? மூடியே விடவேண்டும். மூடிவிட்டால், வித்துவான்களும் ஆண்டுதோறும் வெளிவரமாட்டார் கள். இச்செயலைச் செய்யவாவது அரசியலார் முன்வருவார்களா? ஒன்று, ஆண்டுதோறும் வெளிவரும் புலவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அல்லது, தமிழ்க் கல் லூரிகள் அனைத்தையுமே மூடிவிட வேண்டும்.

எனவேதான் சில கருத்துக்களைக் கூறலாம் என எண்ணுகிறேன். ஒவ்வொரு ஆண்டும், முந்நூறு உயர் நிலைப்பள்ளிகளை அரசாங்கம் திறக்கப் போவதுமில்லை. அல்லது தனித் தமிழ்க் கல்லூரிகளை மூடுவதுமில்லை. இவையிரண்டும் செயல் முறைக்கு ஒத்து வராத பிரச்சினைகள் பின்னர்-இதைத் தீர்க்கத்தான் வழி வகை யென்ன?

தமிழ்மொழி அரசியல் மொழி யெனச் சொல்லி நாட்கள் பல கடந்து விட்டன தமிழ் அரசியல் மொழியா னல்-தமிழ்ப் படித்தவர்களுக்குத் தானே பொறுப்பு அதிகமாக இருக்க வேண்டும். அப்படி ஒன்றும் இன் றையச் சூழ்நிலையில் இல்லை. இனி மேலும் இருப்பதாகத் தெரியவில்லை. பிறகு என்னதான் செய்வது?

1. மங்கலங்களின் (Grammam) அமைப்பையும் அவற்றுக்கு வேண் டிய நலனையும் - அம்மக்களுடன் பழக வேண்டிய முறையினையும்-இன்னும் பலவகை மங்கலத் தொடர்புகளையும்-கலைக் கல்லூரி களில் (Arts Colleges) பயிலுவார் களைக் காட்டிலும்; நூற் பயிற்சியா னும்-அனுபவத் தொடர்பானும்-அதி கம் அறிந்தவர்கள் தமிழ்ப் பயின்ற வர்களே ஆதலால், ஆங்கிலப் பட் டம் பெற்றவர்களை நியமிப்பது போலப் புலவர் பட்டம் பெற்றவர் களையும் - Block - Development Officers; N. E. S. பணிகளில் நியமிக்கலாம். B. A. தேர்வு பெற்ற வர்கள் குறிப்பிட்ட காலப் பயிற்சி பெற்றவுடன் S. E. O ஆகப் பணி யாற்றலாம் என்றிருக்கிறது. அதே போலப் புலவர் பட்டம் பெற்றவர் களையும் அப்பயிற்சி பெறுமாறு செய்து, மேற்குறித்த பணியில் நியமிக்கலாம்.

2. நகரங்களில் காணப்படும் அறிக்கைப் பலகைகளில் தமிழ் மொழி சிதைக்கப்படுதலையும், பிற பொது இடங்களில் அது பல படப் பிழையாக எழுதப் படுதலையும் தவிர்க்க; நகராண்மைக் கழக (Municipality) ஊராண்மைக் கழகம் (Panchayats) போன்ற உள்துறை ஆட்சி அலுவலகங்களில் தமிழ்ப் பயின்ற புலவர்களை நியமித்து அக்குறைபாடுகளை நீக்க அரசியலார் ஆவன செய்யவேண்டும்.

3. தமிழகத்திலே பல ஆதீனங் களும், பல கலைக்கோயில்களும் மலிந்து இருக்கின்றன. அவைகளில் இன்று யார் யாரோ இருந்துகொண்டு என்னென்னவோ செய்கிறார்கள். அவ்வாதீனங்களும், கலைக்கோயில் களும் நல்ல முறையில்-மக்களுக்குப் பயன்படும்படி செய்ய - அங்குள்ள நிருவாகத்தைச் செம்மையான முறை யில் திறம்பட நடத்த ஆதீன இயக்கு னராகவும், இறைபணியாளராகவும் (Executive Officers) தமிழ்ப்புலவர் களை நியமித்துச் செம்மைசெய்யலாம்.

4. நிலத்தைக் கிரையம் செய்வ தெப்படி? வீடு முதலியவைகளை எம்முறையில் கிரையப்பத்திரம்எழுது வது? இன்னும் மற்ற பொருள்களை யும் ஒருவன் விற்கும் பொழுது எம் முறையில் பத்திரம் எழுதிப் பதிவு செய்வது? என்பன போன்ற பல செய்திகளையும் அறிந்தவர்கள் தமிழ்ப் புலவர்கள். அதற்காகப் பணியாற் றும் பத்திரப்பதிவு அலுவலகங்களில் (Registrar Office)பத்திரப் பதிவாள ராகத் தமிழ் வித்துவான்களைநியமிக்க லாம். அதனால் வேலையில்லாத் திண் டாட்டம் ஒழியும்.

அத்துணைப் பணிகளிலும் தமிழ்ப் புலவர்களும் எப்படியாவது நல் வாழ்வு பெறவேண்டும். இல்லையேல், ஒரு பெரும் போராட்டமே உருவாக வேண்டி வரும். உடனுக்குடன் ஆவன செய்தால் அமைதி நிலவும்.

— க. சி. இராசியண்ணன்



...நமது தமிழாசிரியர்கள்
உதவுவர்.

ஆசை நெஞ்சம்!

கொடியேறி மலர்பூத்த மணக்கும் முல்லை
குழலேறி சிகைமுடிக்க எண்ண மில்லை
அடையூறி எழுகின்ற இனிக்கும் தென்றல்
அப்பப்பா! வெம்மைப்புயல் தாங்காத் தொல்லை!
அடிவான விளிம்பதனில் உடைக களையும்
அழகுநிலா; ஆபாசம்! ஆற்றேன் ஆற்றேன்!
உடைவாளை மீசையெனக் கொள்ளும் வேந்தே!
உருகுகிறேன் சுடுபாறை வெண்ணெய் போல்நான்!

படிவாசல் வந்துவந்து பார்த்துப் பார்த்து
பழகிவிட்ட கண்களுமை மறப்ப தில்லை!
விடிவெள்ளி தோன்றட்டும்; எனக்கு என்ன!
உணர்வில்லை; இமைமூடித் துயிலா கண்கள்!
கடிவாளம் போட்டெடுத்தென் நெஞ்சந் தன்னைக்
கட்டிவிடத் துணிவில்லை; கட்டி னாலும்
அடலேறே உன்னிருகைப் பூட்டிற் குள்ளே
அகப்பட்டால் அதுஅடங்கும்; வழிவே றில்லை!

—அமுதன்.

வாழ்க்கைப் பாதை!

மின்னலைப் போலத் தோன்றி மீண்டுடன் அழியும் காம
இன்பமே எண்ண மாக இருந்திட வேண்டா; வாழ்வில்
பன்னலம் பேணு கின்ற பாவையைத் தேர்ந்தெ டுத்தே
நன்னிலை வாழ வேண்டி நலம்பல நாடல் வேண்டும்.

பணம்வரும் என்றே எண்ணி படிப்புவா சனையே யற்று
குணநலன் சிறிது மில்லாக் குமரியை நாடல் வேண்டா
அணியெனும் அழகு செல்வம் அறிவுடன் அனைத்தும் வேண்டும்
பிணியிலா மங்கை-வாழ்வில் பிணங்கிடா நங்கை வேண்டும்

நல்லவை குணத்தைப் பார்த்து நலன்தரும் கல்வி பார்த்து
தொல்லையில் அழகு-பார்த்து தொகைபணம் பின்னே பார்த்து
வல்லவை பார்த்து நல்ல வனிதையைப் பெறுதல் வேண்டும்
எல்லாமும் சேர்ந்த நல்ல எழிலுறு நங்கை பெற்றால்,

இன்பமென் றுரைக்கும் சொற்கும் இலக்கணம் கண்டோன் ஆவாய்
துன்பமும் உன்னைப் பார்த்துத் துதித்துவிட் டோடிப் போகும்
வன்மைசால் இந்த மண்ணில் வாழ்தலே வாழ்வென் றெண்ணி
தன்னலக் காரர் சொன்ன தனியுல கெதையும் வேண்டாய்.

—வள்ளிகாந்தன்.

தளையறுப்போம்!

தென்னவனின் கடற்கோட்டைக் குமரிப் பெண்ணே!
தனியரசு ஆண்டிட்டாய்; மன்றம் கூட்டி
பொன்னொளியைத் தமிழகத்தில் கலந்தாய்; அந்நாள்
பூட்டிவிட்டாய் முத்தாரம்; புலமை யோடு
முன்னவரின் கருத்துரைத்தாய்; புலமைத் தென்றல்
மேவவிட்டாய்; முரசொலித்து ஆண்ட முத்தைத்
தென்னவரின் இலக்கியத்தைச் செப்பு கின்றாய்
தீந்தமிழின் தேன் குடித்தாய்; வாழ்க நீயே!

கவிவாணர் கலைவாணர் உன்னை நோக்கிக்
கரங்குவித்துத் தொழுதசில நாளு முண்டு
கவின்பெருகும் உன்னழகில் மேலை நாட்டார்
கண்வைத்து மேய்ந்தசில நாளு முண்டு
புவியரசர் உன்கரத்தைத் தொட்டே காதல்
பொழிந்திட்ட பொன்னாட்கள் அனேக முண்டு
தவிக்கின்றாய் தளையோடு இன்றே-அந்தத்
தளையறுக்கும் நாள்அதிக தூர மில்லை.

—கு. சீத்தா.

தமிழ் மாந்தர்!

தாயேநிகர் தமிழேஉனைத் தடுத்தேபலர் வாழ்வார்
ஓயேனினி உன்மீதினில் உதவாப்பழி சுமத்தும்
தீயேஎனும் செருக்கானவர் எவராயினும் அன்னார்
மாயத்தவர் எனினும்அவர் நாவும்இரு துண்டே!

என நேரினென்? எதுநேரினென்? எவரேவரின் என்ன?
பொன்னே! இரு கண்ணே! அரும் புகழே! தமிழ்த் தாயே!
மன்னும்வட நாட்டார்உனை வாழ்த்தும்வகை அன்றி
அன்னார்மொழி புகுத்தப்படின் தமிழே! உனைக் காப்பேன்!

மலைபோலொரு அசையாதுள மனிதன் இவன் என்றே
கலக்கம்தனை கொண்டேஇரு கண்ணீரினைச் சிந்தாய்!
உலையின்சிறு தீயேஎனின் ஊரைக்கொளுத் தாதோ?
தொலையாதொரு வேலைஅல பகைமைஎன அறிவாய்!

நூறாயிரம்! நூறாயிரம்! நூறாயிரம்! மனிதர்
மாறானவர் மதியாதவர் மடைபோலவர் வரினும்
[illegible]றும்அனை எம்போலுளார் எண்ணில்பல பேர்தான்
கூறு[illegible]வே! கூறுகவே! குவிப்பாரிது திண்ணம்!

—மு. உலகநா[illegible]

மொழி காப்பீர்!

பொங்கனல் தமிழர் நெஞ்சில் போர்க்[illegible]
எங்கணும் பரவி யிந்நாள் இருந்திடும்[illegible]
சங்கநூற் தமிழின் சான்றோர் சேர்[illegible]
இங்கயல் இந்திச் சொல்லை இனித[illegible]

தீதுறும் "ஆகாஷ் வாணி" தமிழரி[illegible]
மீதுற எடுத்துச் சொல்லும் வாதிலை[illegible]
தாதுறு மொட்டுப் போன்ற தனித்த[illegible]
சூதுறு நிலையம் முன்னர் தம்முணு மறந்து [illegible]

நீதியைக் காக்கப் போகும் நனிபெரும் படையி லிந்நாள்
சாதிகள் கட்சி விட்டுச் சகலருஞ் சேரும் போது
ஓதிடுந் தமிழால் பெற்ற உயர்வினைச் சோற்றுக் காகப்
பேதுற விற்கும் மாந்தர் புன்மையைப் புகழுமோ வாய்?

பொன்மலர்ச் சோலை தன்னில் பூத்திடுங் காளான் பே[illegible]
தென்திசைத் தமிழ்க்கே இன்னல் தருபவர் இவரே யா[illegible]
இன்றிவர் செய்யுஞ் சேவை இமிழ்கடல் இலங்கை வே[illegible]ன்
நன்றியில் தம்பி செய்த நாணிலாச் சேவை யன்றோ?

—ஆ. சானகிராமன்.

தமிழ் வெல்லும்!

தென்னவர் மீது இந்தி திணித்திட நினைப்ப தெல்லாம்
தென்னவர் வடவர் காலில் தெண்டனிட் டிடவே யன்றோ!
இன்னமும் வடவர் நம்மின் இதயமும் அறிந்தா ரில்லை
தென்னவர் தேய்ந் திட்டாலும் தீரமும் தேய்ந்தா போகும்?

வடவரின் சூழ்ச்சித் திட்டம் வரவரப் பெருத்துப் போச்சு
வடமொழி தமிழ கத்தில் வளர்ந்திட விட்ட தாலே
இடர்மிகத் தந்து நம்மை இழிமக னாக்கு கின்றார்!
திடமுடைத் தமிழா இன்னும் திருடவா கொடுப்பாய் நாட்டை

வடமொழி விடமே யாகும் வடக்குளோர் பகையே என்பேன்
வடவரைத் தமிழன் ஏற்றால் வடவரோ டிவரும் ஒன்றே!
வடமொழிக் காரர் காலை வருடுவோ ரெல்லாம் சோற்றுக்
குடமென ஒதுக்கல் வேண்டும், குவலயம் அறிதல் வேண்டும்!

ஊனுடை உறையுள் யாவும் ஒன்றிலா திழந்திட் டாலும்
மானமும் தமிழும் நாடும் மறக்குலம் இழப்ப துண்டோ?
நானிதைக் கூற வில்லை நாட்டவர் நவின்ற சொல்லே!
ஆணவக் கும்பல் நம்மை அழித்திடில் அழிந்தே போகும்!

—மைதீன்.

-4-ம் பக்கத் தொடர்ச்சி—

காரிகள் செய்தனரா என்று ந்ததுதான் அதன் வேலை. ரைஞர் துணையுடன், வேண் ாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ஏடுகள் பல நோக்கப்பட்டு , இது. இவ்விரண்டின் ணக்கும் இந்திய அரசு ான வழிகளில் எல்லாம் தாம். இந்த விசாரணை ச்சத்தில் வெளி வந்த ம இவை.

தே தெரியவில்லை

த்தே தெரியாததால் நிதி ச்சர் இத்தவறைத் தடுக்க வில்லை என்பது இந்திய ாரின் ஒரு வாதம். காலத்தே ாத அளவு நிர்வாகம் நடத்தி மந்திரி? அன்றாடம் நடக்கும் கத்தை கவனிக்காமல் மந்திரி ற்றப் போனாரா, என்ன? ம், மாலைகளில் மூழ்குவதற் வரவேற்பு மொழிகளில் பதற்கும் நப்பாசை கொண் தனர். அதனால்தான் அதி ள் குற்றங்களைச் செய்து னர்.

சிதார் நிலை என்ன?

பெரும் பெரும் சீமான்களோடு ன்றாட வாழ்விற்குப் போராடும் மைக் கூலிகளான ஆலைத் தாழிலாளர்களும் ஆசிரியப் பெரு க்களும் எல். ஐ. சி.யில் பாலிசி ாராயிருக்கின்றனர். அன்னார் த்த வியர்வுத் துளிகளும் அதில் . முந்திராவுக்காக க்கித் ப்பட்ட 1¼ சோடியை அவர் து சல்லிக் காசுகளும் ண்டு. "எல். ஐ. சி. நம்பிக்கைக் ரிய நிறுவனம்; நாணயமானது; ற்காலத்தில் உதவும்!" என்று பித்தானே, அவர்கள் பாலிசி த்தனர்? அதற்குள்ள பதில் ன. முந்திராவிடம் அந்தப் ணம் பறிக்கப்பட்டதா?

கம்மாற்றே...

"தென்றல்" 6-12-58-ம் நாள் தழில், முந்திராவைப்பற்றி எழு போது குறிப்பிட்டிருந்தோம் ப்படி!

"பாய்ந்து வரும் நாய்க்கு ழுப்புத் துண்டைப் போட்டு ட்டு வீட்டையே கொள்ளை டிக்கும் திருடர்களைக் கண்டி க்கிறோம்!

தடுக்க வரும் காவல்காரனுக் ப் பங்கு கொடுத்துக் கூட்டாளி யாக்கிக்கொள்வர், கொள்ளையர் இதுவும் ஒரு முறை!

ஆனால் முந்திரா மிகத் திறமை யோடு நடந்திருக்கிறார் நாடாள் வோர் பண்பறிந்து!"

இப்படிக் குறிப்பிட்டிருந்தோம் அன்று. அதையே இன்றும் கூறு கிறோம். முந்திரா தன்னிடம் தேர் தல் நிதிக்கு மடி ஏந்தி நின்ற அகில இந்தியக் காங்கிரசுக்கும், உத்தரப் பிரதேச மாநிலக் காங்கிரசுக்கும் வீசியெறிந்திருக்கிறார் 2½ இலட்சம். **ஆமாம்! முந்திரா வீசிய எலும்புத் துண்டுதான் இரண்டரை இலட் சம் நன்கொடை! முந்திரா காவல்காரனுக்குத் தந்த பங்கு தான் அந்த நன்கொடை! முந் திரா தந்த இலஞ்சம்தான் தேர் தல் நிதி! கைம் மாற்றாகப் பெற்றுத் திரும்பித் தரும்** "யோக்கியன்" போல், தன் கட்சித் தேர்தல் நிதிக்கு 2 இலட்சம் தந்த முந்திராவுக்கு எல். ஐ. ஸி. பணம் 1¼ கோடியை வாரியிறைத்திருக் கின்றனர். இவ்வாறு நாம் சொல்ல வில்லை; விவியன்போஸின் கமிஷன் சொல்கிறது. இஃதல்லாது மற் றொன்றையும் செய்திருக்கின்றனர், காங்கிரசார்.

தெரிந்தும் மறைத்தனர்!

பலவற்றை விவியன்போஸ் குழு வின் முன் சொல்லத்தவறியோருள், முக்கியமானோர் ரிசர்வ் வங்கி கவர் னரும் ஸ்டேட் வங்கித் தலைவரும் ஆவர். அன்னார் தம் பொறுப்பை யறியாது உண்மையை மறைக் கின்றனர்.

ஏன் அஞ்சுகின்றனர், குழுவின் முன் குறைபாடுகளைக் கூற? அமைச்சர் பெருமக்களோ, உண்மை வெளிப்பட்டால் தம் பெயருக்கு இழுக்கு வரும் என வாய்மூடிக் கிடக்கின்றனர். அலு வலர் மட்டும் ஏன் வாய்திறக்க வேண்டும்? உள்ள பதவியையும் இழப்பதற்கா?

வாயை மூடிக்கொண்ட அமைச் சருள் மொரார்ஜியும் ஒருவர்.

மொரார்ஜிக்கு இதில் ஏன் இத்துணை அக்கறை? மொரார்ஜி வணிகத் துறைக்குப் பெறுப்பேற் றிருந்தபோது, முந்திரா பங்கு கொண்டுள்ள **பிரிட்டிஷ் இந்தியா கார்ப்பரேஷன்** என்ற அமைப்பில் உள்ள **கான்பூர் துணி ஆலையை** மூடப் போவதாக அறிவிப்பு வந்த தாம். அந்த ஆலை மூடப்பட்டால் மூன்று ஆயிரத்து ஐநூறு தொழி லாளர் வேலை இழப்பர் என்பது மட்டுமன்று. ஆளும் இயக்கத்தார்க் குத் தலைவலி வேறு வருமே என் றஞ்சிய மொரார்ஜி, முந்திராவை அணுகினாராம். "ஆலையை மூட விடக்கூடாது; ஆனமட்டும் முயல்க! அதற்காக முந்திராவுக்கு எது தேவையானாலும் தருக!" என்ற முறையில் உத்தரப் பிரதேச அரசு வேறு, தில்லி ஆட்சிக்கு மடல் தீட்டியதாம்!

இதுபற்றி, தில்லி அமைச்சர்கள் மொரார்ஜியும் மனுபாய்ஷாவும், முந்திராவின் பிரதிநிதியைப் பல முறை கண்டு பேசியிருக்கின்றனர். ஆலையை நடத்துவதில் ஆண் டொன்றுக்கு இருபத்தைந்து இலட் சம் ரூபாய்வரை இழப்பேற்படுவ தாகக் கணக்குக் காட்டியிருக்கிறார், முந்திராவின் பிரதிநிதி. எதிர் இயக் கத்தாரிடமிருந்து தாம் தப்பித்திடும் அரசியல் லாபத்திற்காக "**இழப்பை எப்படியும் எங்கள் அரசு தரும்!** ஆலையை நடத்துக!" என்றுகூறின ராம் மந்திரிமார். அதனால்தான் முந்திரா நடத்தினாராம் ஆலையை, மறுபடியும். "மூடப்படும், ஆலை!" என்ற அறிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொண்டாராம்! இந்தச் செய்தியையும் வடநாட்டு ஏடுகள் தான் தருகின்றன. விவியன்போஸ் குழுவும் இதையே சுட்டிக்காட்டிக் கண்டிக்கிறது. தொழிலாளர்மீது உண்மையிலேயே பற்றிருக்குமா யின் ஆலையை சர்க்கார் ஏற்று நடத்தி முந்திராவின் கொழுப்பை அடைத்திருக்கலாமே! ஆள்வோர் மறுக்கவில்லை. நன்கொடை தந்து நாட்டைக் கெடுப்போர் வாழ லாமா?

புதுப் பரிசு

இத்தனைக்கும் பொறுப்பான ஆட்சியினர் தவறு செய்த எவரை யும் களையாமல், தட்டித் தருகின்ற னர். பட்டேல் வகித்த பதவியைக் காமத்துக்குத் தந்திருக்கின்றனர். ஆமாம்! இது அநீதிக்கு புதுப் பரிசு!

நீதிக்குக் கண்டனம்

தவறைக் கண்டிக்காததோடு, அவற்றைச் சுட்டிக்காட்டிய நீதிபதி களை வேறு கண்டிக்கிறார் பிரதமர். நீதிபதிகளின் சொற்படி நடந்து காட்ட வேண்டிய இப்பெரு மகனாரே இப்படி என்றால்... எல்லோரும் முந்திராக்கள்தான்.

-மா. பாண்டியன்

தாழ்ந்திடவோ? தளிர்த்திடவோ?

1

தாயகத்தின் நல்வீரம் அழிந்ததேயோ?
தன்மானம் தகர்ந்துவிட வாழத் தானோ?
சேயகத்தில் தாய்ப்பாலைத் தமிழி னோடு
சேர்ந்தீந்த நிலைதானும் மாறிப் போச்சோ?
தாயகத்தே ஊறுகின்ற வீரம் கூட
தளிர்க்கஉரம் இன்றியிங்கே செத்த தேயோ?
தாயகமே! தமிழகமே! தாழ்ந்த வாழ்வேன்?
தலைவிதியே என்றுநீயும் வாழ்ந்த தாலோ?

2

வடநாட்டார் தமிழ்மொழியை அழித்து விட்டால்
வண்டமிழர் அடிமையாவார் என்றே எண்ணிக்
கொடுஇந்தி புகுத்திதமிழ் கொல்லு கின்றார்;
கண்டிருந்தும் தூங்குகின்றாய் தமிழா! நன்றோ?
விடுகின்ற கணையெனவே வடநாட் டாரை
வீழ்த்திவிடும் துடிப்பின்றி வாழ்வ தேனோ?
அடிமையிலே வீழ்ந்துவிட்ட கார ணத்தால்
விடுதலையின் உணர்வெல்லாம் அற்ற தேயோ?

3

வண்டமிழர் வண்டமிழில் தம்மின் நாட்டில்
வானொலியென் றுரைக்காமல் நச்சு இந்தி
பின்னிநமைக் கேவலமே செய்கின் றாரே!
பைந்தமிழின் உணர்வோடு உண்ணா நோன்பு
கொண்டதனால் பலராமன் தன்னை இன்று
கைதுசெய்து தற்கொலைசெய் சட்டம் தன்னில்
தண்டிக்க நினைத்திடல்தான் அறமுமாமோ?
காந்திதந்த போராட்டம் வெட்கக் கேடோ?

4

நடராசன் தாலமுத்து பலியாய்த் தந்தோம்;
நாள்தோறும் இரத்தத்தை தந்து இந்த
வடநாட்டார் கொடுமையினை ஒடுக்கி வைப்போம்!
வண்டமிழா காந்தியின்நல் பெயரைச் சொல்லி
மடித்துவிட்டார் அரசியலை கொடிய கள்வர்;
மடித்தபின்னர் காந்தி'மகான்' வகுத்து விட்ட
தடத்தின்வழி நடப்பவரைக் கொடுமை செய்தால்
சுடுகாட்டின் அரசியலா தமிழர் நாட்டில்?

5

தமிழ்மொழியை அழித்துவிட வந்த பேர்கள்
தலையினையே கொய்திடுவோம்; இன்னும் நாட்டில்
அமிழ்கடல்போல் பொறுமைமிக வேண்டு மென்போர்
இந்நாட்டின் நிலையுணரார்; தமிழர் இன்னும்
கமழ்தென்றல் தூக்கத்தில் தூங்கி விட்டால்
தமிழ்மொழியே சுடுகாட்டுச் சாம்பல் ஆகும்!
அமிழவைக்கும் போராட்டப் பாதை தன்னில்
அடியெடுத்து வைத்திடுவாய்; இன்றேல் சாவாம்!

6

வாழ்ந்திடவா வீழ்ந்திடவா தமிழ மக்கள்?
வளர்ந்திடவா தளர்ந்திடவா தமிழர் பண்பு?
தாழ்ந்திடவா தளிர்த்திடவா தமிழர் வாழ்வு?
மாண்டிடவா மலர்ந்திடவா கலையும் இங்கே?
பாழ்படவா பலப்படவா தமிழர் வீரம்?
பாலோடு மொழியூட்டும் தாயின் அன்பும்
பாழ்பட்டுப் போனதுவோ? உணர்ச்சி யற்றீர்!
பறந்திடுவீர் களத்திற்கே தமிழைக் காக்க!

— "ரவி" —

ஐயம் அகற்று!

கண்ணதாசன் பதில் தருகிறர்.

★

புனிதவல்லி, மதுரை.

சென்னை மாநகர் மன்றம் விதிக்க யோசித்த பிரயாணி வரியை ம. பொ. சி. ஏன் எதிர்க்கிருர் ?

அவர் பல நாட்கள் வரை அது "பிரியாணி வரி" என்று எண்ணிக்கொண்டு, மிலிட்டரி ஓட்டல்காரர்களை எல்லாம் தூண்டிக்கொண்டு வந்தார். இப்பொழுதுதான் இது வேறு வரி என்று தெரிந்தது; விட்டு விடாமல் எதிர்க்கிருர்.

★

மணி, செக்கந்தராபாத்.

ஆச்சாரியாரின் சுதந்தரா கட்சியைப் பற்றி உங்கள் கருத்து என்ன ?

பந்தலுக்கு உதவவேண்டிய பட்ட மரங்களும் மொட்டை மரங்களும் பழம் பழுக்க நினைக்கின்றன. தொண்டரில்லாத் தலைவர்கள் கட்சியில் இது ஒரு வகை. ஆச்சாரியார் ஏற்கனவே ஒரு முறை சொல்லி இருக்கிருர், தான் தொட்டது துலங்காது என்று. அவர் வாக்கு எப்போதும் பலித்திருக்கிறது. இப்போதும் பலிக்கும் !

★

கா. அங்கமுத்து, அழகாபுரி

பிரயாணி வரி என்பது இப்போது புதிதாக விதிக்கப்பட்டதா ?

இல்லை. ஏற்கனவே தோழர் ம. பொ. சி. கார்ப்பரேஷன் கட்டடத்திற்குள் புகுந்து கொண்டு 'புத்தகத் தொழில்' புரிந்த காலத்தில், இந்த வரியைப் பற்றி பிரமாதமாக ஆதரித்துப் பேசியிருக்கிருர். காதறுந்த மூளிக்கு இப்போது அதே வரியின்மீது காரம் பிறந்திருக்கிறது.

★

டி. பி. ராதா, புரசைவாக்கம்.

" 'மேயர்' என்ற ஆங்கிலச் சொல்லையும் 'உதய சூரியன்' என்ற வடமொழிச் சொல்லையும், தி. மு. கழகத்தார் உபயோகப் படுத்தலாமா?" என்று ம.பொ.சி. கேட்கிருரே, அந்த வார்த்தைகளைத் தூக்கிக் கடலில் வீசிவிடக் கூடாதா ?

சிவஞானம் என்பதுகூடத் தான் வடமொழி. அதற்காக, சிவஞானத்தைத் தூக்கிச் சாக்கடையிலா எறிந்து விட்டோம்?

தங்கப்பாண்டியன், சாயல்குடி.

ஆதித்தனர் கட்சிக்கு ஆயுள் எவ்வளவு ?

அவர் ஆயுளே கட்சியின் ஆயுள் !

★

ஜி. கோவிந்தராசன், தேவகோட்டை.

பெரியார் ஏன் "வெங்காயம்" என்ற வார்த்தையை அதிகமாய் உபயோகப்படுத்துகிருர் ?

வெங்காயத்தைக் கண்டால் பிடிக்காத பார்ப்பனர்களாவது வெளியேறட்டும் என்று நினைக்கிருர்.

★

தமிழ்த்தம்பி, அலவாக்கோட்டை.

சென்னை மாநகர் மன்றத்தை தி. மு. கழகம் ஆளுவது பற்றி, தி. க. தொண்டர்கள் என்ன நினைக்கிருர்கள் ?

தன் தொண்டர்களை "முட்டாள்கள்' என்கிருர் பெரியார். முட்டாள்கள் என்ன நினைத்தால் நமக்கென்ன ?

★

அருள்ஞான கிராமணி, மீர்சாகிப்பேட்டை, சென்னை.

நீர் "செட்டியார்" என்பதால் தான் "குமுதம்" சிவகெங்கைச் சீமையைப் புகழ்ந்ததா ?

இதே "செட்டியார்"தான் மாலையிட்ட மங்கையை எடுத்தவர். "குமுதம்" ஏன் அதை வசைபுராணம் பாடிற்று ? விழுந்துபோன மீசைக்கு, பழைய 'குமுத'ங்களைப் படித்துக் காட்டுங்கள்.

★

இல. கண்ணன், திருவரங்கம்.

அறிஞர் அண்ணு அவர்களுக்கு இப்போது என்ன வயதாகிறது ?

தான் பிறந்தநாளைக் கொண்டாடுவது அறிஞர் அண்ணு அவர்களுக்குப் பிடிக்காது. அதனல் அவர் தன் வயதை வெளியிடுவதேயில்லை. ஆனல் நான் தேடிக் கண்டுபிடித்து விட்டேன். வரும் செப்டம்பர் 15-ம் தேதி அறிஞர் அண்ணு அவர்களுக்கு 50 வயது நிறைகிறது. அன்று "தென்றல்" ஒரு மிகச் சிறந்த மலரை வெளியிடும்.

கவலையில்லாத மனித[ன்]

தொடக்க விழா

14-6-59 அன்று காலை 10 மணிக்கு பரணி ஸ்டுடியோ[வில்] கண்ணதாசன் புரடக்ஷன்சாரின் அடுத்த தயாரிப்பான "கவலையில்[லாத] மனிதன்" படத்திற்கான தொடக்க விழா நடைபெற்றது. பட[உலகப்] பிரமுகர்களும், பல்துறை அறிஞர்களும் குழுமியிருந்த அக்காட்சி [கண்] கொள்ளா விருந்தாய் அமைந்தது.

முன்னுள் நீதிபதி திரு. எஸ். ஏ. அய்யாசாமி (செட்டியார்) அ[வர்கள்] விழாவுக்குத் தலைமை ஏற்றுர்கள். பெருமதிப்புக்குரிய அவர்கள் தமது ஆலோசனைகளையும் இனிய வாழ்த்துக்களையும் தந்து பெருமைப்[படுத்] தினுர்கள்.

முக்கூடல் ஹரிராம் சேட் அவர்கள் (த. பி. சொக்கலால்ராம் பீடிக் கம்பெனி உரிமையாளர்) தமது வாத்தியக்குழுவினருடன் திருக்[குறள்] பாடல்களைப் பாடினுர்.

அடுத்துப் பலர் படம் வெற்றி பெறுவதற்கான வழி வகைகளை[யும்] வாழ்த்துரைகளையும் வழங்கினர். முதலில் நாவலாசிரியர் திரு "அகில[ன்"] அவர்கள் "பொதுமக்களின் கவலையைப் போக்கும் சித்திரமாக அமை[யும்] கவலையில்லாத மனிதன்" என்ற உறுதியைத் தெரிவித்துத் தன் வாழ்[த்துக்] களைக் கூறினுர்.

அடுத்துப் பேசிய, திரைப்பட கதை-வசனகர்த்தாவும் அருணா[சலம்] ஸ்டுடியோ உரிமை[யா]ளரும் ஆன திரு. ஏ. கே. வேலன் அவர்கள்; [படத்] தின் வெற்றிக்கு நல்[வா]ழ்த்துரைத்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்றில் அங்கம் வகிக்கும் டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் "கண்ணதாச[ன்] மக்கள் கவிஞர்; அவர் எடுக்கின்ற எந்தச் சித்திரமும் கவலை தீர்க்கும் சித்[திர] மாக அமையும் !" என்று பேசி வாழ்த்தினுர்கள்.

"தன்னம்பிக்கையில்லாத மனிதன் கவலைக்கு அடிமையாகிருன்" என்று கூறினுர் நகைச்சுவைக் களஞ்சியமான நடிகர் சந்திரபாபு அவர்க[ள்].

"கண்ணதாசனின் முயற்சி வாழ்க ! வள்ர்[க !] வெல்க !" என்று இதய[ம்] கலந்த நல்லுரை வாழ்த்துத் தந்தார் நடிக[வே]ள் எம். ஆர். இராத[ா] அவர்கள்.

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் "கவி மக்களுக்கே என்ற வழிதான் கழகத்தின் வழி" என்பதை விளக்கிவிட்டு, கதை[யின்] போக்கை விளக்கினுர்கள். "மற்றையோரின் கவலையைப் போக்குதற்[கு] உழைப்பவன்; மக்கள் கவலையின்றி வாழவேண்டும் என்று பாடுபடுபவன் [அந்த] மனிதன்; அம்மனிதனின் கதைதான் கவலையில்லாத மனிதனின் கதை" என்று விளக்கினுர்.

ஓய்வுபெற்ற நீதிபதியான திரு. அய்யாசாமி அவர்கள், தம் முடிவுரையி[ல்] அழகிய பல கருத்துக்களைத் தந்தார்கள். "நான் ஓய்வு பெற்றபின்தா[ன்] எனது அரசியல் கருத்துக்களை - உண்மையான அபிப்பிராயத்தை வெளி[ப்] படையாகக் கூறமுடிகிறது. இதுதான் நியதி!" என்றதோடு, "சென்[னை] மாநகராட்சியைக் கைப்பற்றியிருக்கும் தி. மு. கழகத்திற்கு இப்போ[து] அதிகப் பொறுப்புக்கள் வாய்த்திருக்கின்றன. அவற்றைத் திறமையுட[ன்] செய்து வெற்றிபெற விரும்புகிறேன். மேயர் அ. பொ. அரசு அவர்[களை] அவர் அப்பதவி பெற்றபின் இன்றுதான் காண்கிறேன். அவருக்கும் [என்] நல்வாழ்த்துக்கள் !" என்றுர்கள்.

அடுத்து வாழ்த்துதலுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தம்மாலா[ன] வழியில் எல்லாம் கடமையைச் செய்து வெற்றி காண்பதாக மாநகராட்[சி] மன்றத்தலைவர் திரு. அ. பொ. அரசு அவர்கள் கூறினுர்கள். பின்[னர்] காமிராவை முடுக்கிப் படத்தைத் தொடக்கிவைத்தார்கள். மாலினியும் சந்திரபாபுவும் நடிக்கும் கட்டம் ஒன்று படமாக்கப்பட்டது. பின்னர், கண்ணதாசன் எழுதி—சந்திரபாபு பாடும் பாட்டொன்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. கண்ணதாசனும் அய்யாப்பிள்ளையும் திரைக்கதை வசனம் எழுதும் இப் படத்தின் டைரக்ஷனை திரு. கே. சங்கரும், காமிராவை திரு. தம்புவும், கலையை திரு. பாலுவும் கவனிக்கின்றனர். விஸ்வநாதன்-இராமமூர்த்தி இசையமைக்கின்றனர்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் கண்ணதாசன் வரவேற்றுர்; நன்றியுரைத்தார். மற்றும் திரு. ஏ. எல். சீனிவாசன், திரு. அம்பி, திரு. பகவதி, திருமதி ஞானம், முதலியோர் விருந்தினரை வரவேற்றனர்.

மொத்தத்தில் "கவலையில்லாத மனித"னின் தொடக்க விழா, ஒளி படைத்த முகத்தினர் பலரின் வாழ்த்துக்களுடன் தொடங்கியது. ★

அன்பு நிறைந்த கழகத் தோழர்களுக்கு,

வணக்கம். தவிர்க்கமுடியாத அலுவல்களின் காரணமாக ஏற்கனவே ஒத்துக்கொண்டுள்ள நிகழ்ச்சிகள் தவிர வேறு கூட்டங்கள், திருமண நிகழ்ச்சிகளில் செப்டம்பர் முடிய கலந்துகொள்ள இயலாதவனுயிருக்கிறேன் என்பதைப் பணிவன்புடன் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்குப் பிறகு அழைக்க விரும்பும் அன்பர்கள் தயை செய்து செப்டம்பர் முதல் வாரத்தில் என்னைச் சந்திக்க வேண்டுகிறேன்.

அன்பன்,

டி. வி. நாராயணசாமி

8-ம் பக்கத் தொடர்ச்சி —

மற்கூறிய இருவகைப் பாயிரத்
நம் பொதுவாகவும் சிறப்பாகவும்
பெயர்கள உள. அவை,

கவுரை பதிகம்
அணிந்துரை நூன்முகம்
ாவுரை தந்துரை
புனைந்துரை பாயிரப்.''

என்னும் எட்டாம் (நன்னூல், 1). இவற்றின் பொருள் விளக்கம் வருமாறு :—

1. முகவுரை – இது நூல்முகத்து உரைக்கப்படுவது; இற்றை வழக்கில் உரைநடையாயிருப்பது; பெரும்பாலும் நூல், ஆசிரியன், பதிபபு முதலியவற்றின் வரலாற்றைக் கூறுவது.

2. பதிகம் – இது நூலாசிரியன் பெயர், நூல் வந்த வழி முதலிய பத்து அல்லது பதினொரு குறிப்புக்களைத் தருவது ஒரு பொருள் பற்றிய பத்து அல்லது பதினோரு பா அல்லது பாவினத் தொகுதி பதிகம் என்று பெயர் பெற்றிருத்தல் காண்க. எடுத்துக் காட்டு: தேவாரப் பதிகம்.

பதிகம் என்னும் பெயருக்கு ''ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையும்
...ந்துச் சொல்வது'' என்று
...க் குறிப்பாக,
...வி
...வகைப் பொருளைத்
...தியாகச்
...ல்லுதல் தானே''
...மேற்கோளுங் காட்டினர்,
...ரையாசிரியர் சடகோப
...ராமாநுசாச்சாரியார். ஐம்பொருள்
...பாயிரத்திற்கும், பதினொரு
... சிறப்புப் பாயிரத்திற்கும்

... என்னும் பெயர் பத்து (பது)
... சொலலினின்று தோன்றி
...ன். ''ஆக்கியோன்
... என்னும் நூற்பாவிற் குறிக்
...எண் பொருளும், ''காலங்
... என்னும் நூற்பாவிற் குறிக்
...ப்பொருளும் ஆகிய
... பொருளைத் தருவதென்று
...ரைப்பதே பொருத்தமான
...ன்று பத்தை நோக்கச் சிறி
... பதினொன்றும் பத்தாகவே
... (ஆங்கிலத்தில்
...'s dozen எனப்

... பதிகம் என்னும் சொல்
சொல்லாலும் பொருளாலும் தூய தமிழாயிருக்கவும், அது ப்ரதீக என்னும் வட சொல்லின் திரிபாக வடமொழியாளர் கூறுவதும், அதைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி பின்பற்றியிருப்பதும், குறும புத்தனமும் பொறுப்பற்ற செயலு
ாகும். உண்மையில், பதிகம்
...ன்னும் தென் சொல்லே ப்ரதீக
...ன்னும் வடசொல்லாகத் திரிந்துள்
ளது. பதின் செய்யுட்டொகுதியை குறிக்கும் பதிகம் என்னும் தென் சொல்லைப் பத்யம் (செய்யுள்) என்னும் வடசொல்லோடிணைக்க விரும்புவார் வேறு என்தான் சொல்லார்!

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் உள்ள சிறப்புப் பாயிரங்கள் பதிகம் எனப் பெயர் பெற்றுள்ளன.

3. அணிந்துரை – இது பிறைமலை
...டிகள் மதிப்புரையும் முன்னுரையும்
...போல் ஒரு நூலுக்கு அணி (அழகு)
...ய்து நிற்பது.

... நூன்முகம் – இது நூலுக்கு
... சொல்வது; உரைநடை, செய்
... ஆகிய இரு வடிவிற்கும் பொது
...து.

... புறவுரை – இது நூலுக்குப் புற
... உரைக்கப்படுவது. புறம்–
...பு இறுதி. தொல்காப்பிய இறுதி
...ய உரைக்கப்பட்டுள்ள நூலுரை மரபு புறவுரையாகும். சிலர் நூலுரை மரபு செய்யுளியலிலேயே கூறப் பட்டுவிட்டதனால் (1421 - 1430), மரபியலில் உள்ளது பிற்செருகல் என்பர் (1590-1610). அகத்திணையியலிற் கூறிய உவமையிலக்கணச் சுருக்கத்தையே (992 - 995) பின்னர் உவமவியலில் தொல்காப்பியர் விரித்துரைப்பதால் (1222 - 1258), மரபியலின் இறுதியில் விரித்துரைக்கப் பெறும் நூலுரைமரபு பிற்செருகலெனக்கொள்ளப்படாதென்க. (புறவுரை என்பது, மேலைநாடக நூல்களிற் கூறப்படும் Epilogue என்பதை ஒருபுடை யொத்ததாகும்).

பதிற்றுப்பத்தின் உரைபெறு கட்டுரைகள் இடவகையால் புறவுரையாக அமைந்துள்ளன

6. தந்துரை – இது நூலிற் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பது. பேரறிஞர் முன்னுரை (Introduction) பெரும்பாலும் தந்துரையாக விருக்கும்.

7. புனைந்துரை – இது நூலின் சிறந்த கூறுகளை எடுத்துரைத்துப் போற்றுவது, திருக்குறட் சிறப்பைப் போப்பையர் முன்னுரை (Introduction) எடுத்துக்காட்டுவதுபோல. புனைதல் - சிறப்பித்தல், புகழ்தல்.

8. பாயிரம் – இது முதன் முதல், பொருகளத்துப் போர் முகவுரையாகப் பகைவரை விளித்துத் தம் வலிமைச் சிறப்பைக் கூறும் நெடுமொழியைக் குறித்தது; பின்பு நூன் முகவுரைக்கும் வழங்கத் தலைப்பட்டது. நெடுமொழி – போர்மறவனின் தன் மேம்பாட்டுரை.

பாயிரம் என்பது முதற்கண் நெடுமொழியைக் குறித்தமையை,

''மறுமனத்த னல்லாத
மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி
யொழுகின் – செறுமனத்தார்
பாயிரங் கூறிப்
படைதொக்கால் என்செய்ப
ஆயிரங் காக்கைக்
கோர் கல்.''

என்னும் பழமொழிச் செய்யுளான் (249) உணர்க. 'பாயிரம்' என்பதற்கு ''வீரத்துக்கு வேண்டும் முகவுரைகள்'' என்று பழையவுரை உரைத்தலையும் நோக்குக.

பயிர்தல்—அழைத்தல், போருக்கழைத்தல். பயிர் – (பயிரம்) – பாயிரம்.

சென்னைப் பல்கலைக்கழக அகராதி, 'பாசுரம்' என்பது 'பாயிரம்' என்று திரிந்திருக்கலாம் என்று தன் அறியாமையைக் காட்டுகின்றது.

இற்றை நூல் வழக்கைநோக்கின், பாயிரப் பெயர்களுள் புறவுரை, பாயிரம் என்னும் இரண்டும் பொதுவும் சிறப்புமாகிய இருவகைப் பாயிரத்திற்கும் பொதுவாம்; ஏனைய சிறப்புப் பாயிரத்திற்கே சிறப்பாம். சிறப்புப் பாயிரத்திற்குரியவற்றுள் முகவுரை, நூன்முகம், பாயிரம் என்னும் மூன்றும் தற் சிறப்புப்பாயிரத்திற்கும் உரியன. இவற்றுள் நூன்முகம் என்பது தற்சிறப்புப் பாயிரத்திற்குச் சிறப்பென்று கொள்ள இடமுண்டு.

தந்துரை என்பது, வழக்கிலில்லாவிடினும், பொதுப்பாயிரத்திற்கும் ஏற்கும்.

உரைமுகம், தோற்றுவாய், முன்னுரை, பதிப்புரை மதிப்புரை, சாத்துப்பா (சார்த்துப்பா) முதலிய பெயர்கள் இக்காலத்தெழுந்த புது வழக்கு. இவற்றுள், முன்னிரண்டும் தற்சிறப்புப்பாயிரத்தையும், பின்மூன்றும் சிறப்புப் பாயிரத்தையும், இடையொன்றும் அவ்விரண்டையும் சாரும். சாத்துப்பா என்பது செய்யுள்; ஏனைய உரைநடை.

இதுகாறுங் கூறிய பாயிரப் பெயர்களெல்லாம் தூய தென்சொற்களென்று அறிக. முகம் என்பது தென்சொல்லே என்பதை, யான் சென்ற ஆண்டுத் தமிழ்ப்பொழிலில் வரைந்துள்ள 'தமிழ்முகம்' என்னும் கட்டுரையைக் கண்டு தெளிக. இற்றைத் தமிழருட் பெரும்பாலார் பகுத்தறி விழந்திருப்பது நோக்கி, வடவரும் (அவர் அடிவருடியரும் அடியார்க்கடியாருமான) வையாபுரிகளும் தூய தென்சொற்களை வடசொல்லெனத் துணிந்து மருட்டுவது பற்றி, அவை அன்னவென்று மயங்கற்க.

மேற்காட்டியவாறு, முகவுரையைக் குறிக்கப் பல தூய தென்சொற்களிருப்பவும், இடைக்காலப் புலவர், சிறப்பாக யாழ்ப்பாணத்தார், உபக்கிரமணிகை, உபோத்காதம் என்னும் வடசொற்களை வேண்டாது வழங்கிச் சிறுமையிற் பெருமை கொண்டனர். இத்தகைய வடசொல்லாட்சி தமிழரின் மடமையாலும் அடிமைத்தனத்தாலும் நேர்ந்ததேயன்றி, தலைமைசால் தமிழ்ப்புலவர் தாமாக விரும்பித் தழுவியதன்று. ஆதலால், தமிழின் தூய்மையைக் குலைத்தமதுன்றி அதன் தொண்டையையும் நெரித்துக் கொல்லப் பார்க்கும் ஐந்தாம் படைச் சொற்களையெல்லாம், அறவே அகற்றி விடுவது தமிழன் முதற் கடமையாம். தமிழன் விடுதலை தமிழின் விடுதலையை அடிப்படையாகக் கொண்டது. தமிழுயரத் தமிழன் உயர்வான்.

★ ★ ★

—9-ம் பக்கத் தொடர்ச்சி—

சிங்களவ இனங்கள் இரண்டுமே ஒரே மூல முதல் இனத்தின் இரு கிளைகளென்பதையும், இரண்டுமே தென்கிழக்காசியாவின் உயிர்மை இனங்களென்பதையும் இச்செய்தி சுட்டிக் காட்டுகிறது.

தென்கிழக்காசிய நாகரிகம் என்பது உண்மையில் மேற்கே மடகாஸ்கர், மோரீசு முதல் இலக்கதீவும், மாலதீவும், நேபாளம, அசாம், மலையாளக்கரை. தமிழகம், இலங்கை, அந்தமான், நிக்கோபார், திபேத், வங்கம், பர்மா, மலாய், கிழக்கிந்தியத் தீவுகள், தாய்லந்து, பிரஞ்சு இந்து சீனு, ஹனுய், தென் சீனு, சப்பான், பிலிப்பைன் ஆகிய பகுதிகளெங்கும் பரவிய ஒரு பெரு வாழ்வு ஆகும். இந்நாடுகளனைத்தின் கலைகள், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றில் காணப்படும் ஒற்றுமை மிக மிகப் பெரிது. மேலீடாகப் பார்ப்பவர்களுக்குக்கூட எளிதில் புலனுவது. இந்தியத் துணைக்கண்டத்தில் பிற இன நாகரிகக் கலப்புக்களால் முனை மழுங்கிய இந்த ஒற்றுமைகள் கீழ் திசையின் ஓரடிப் படையினத்தின் பழமையைச் சுட்டிக் காட்டுபவை ஆகும்.

சங்க காலத்துக்கு முன்னுலேயே பாண்டியரும், 12-ம் நூற்றுண்டிலிருந்து சோழரும் மலாயா, இந்து சீனுவரை தம் ஆட்சியையும் கலையையும் பரப்பினர். அவர்கள் பின் வந்த தமிழரசர் மரபினர் அந்நாடுகளை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆண்டனர். இலங்கை மன்னரும் இப்பகுதிகளில் தொடர்பு கொண்டிருந்தனர். ஆனுல் இந்த வரலாற்றுத் தொடர்புகள் முன்பே நிலவிய அடிப்படை இனத்தொடர்பின் மேலடுக்குகள் மட்டுமே.

உலகில் மனித இனம் தோன்றிய பகுதி தமிழகத்துக்கும் இடைப்பட்ட பகுதியே என மணனூலார் குறிக்கின்றனர். முதல் முதல் மனிதன் கப்பல் தொழிலைக் கையாண்ட பகுதியும் இதுவே. கி பி. 12-ம் நூற்றுண்டுவரை உலகக் கடலோர இனங்கள் யாவும் இப்பேரினம் சார்ந்தவையே. சென்ற ஆயிர ஆண்டுகளாக உலக நாகரிகப் போக்கில் இப்பகுதி சற்றுப் பின்னடைந்து, மேலை நாடுகளின் வேட்டைக் களமாய்விட்டாலும் வருங் காலத்தில் இவை மீண்டும் உலகில் மேலோங்குவது உறுதி. நில உலகு, கடலுலகு, வானுலகு ஆகிய மூவகையிலும் இதற்கு இருக்கும் வாய்புக்களும் வாய்ப்பு வளங்களும் எல்லையற்றவையே ஆயினும் இப்பகுதி மக்கள் முழுவதும் தாம் முன்பு ஒரு நாகரிக இனம் என்பதை உணரின், இப்பகுதியின் விழிப்பு ஓர் இன மலர்ச்சியாகவும், இப்பகுதியின் புகழ் மலர்ச்சியாகவும் அமைய வழியுண்டு. அவ்வகையில் இலங்கை அறிஞரும் கலைஞரும் பிற தென்கிழக்காசிய அறிஞரும் கலைஞரும் தம் ஆய்வாராய்வுகளிலும் கலைவளத்திலும் முன்னேறுவர் என்று நம்புகிறோம். ★

கலியாண மேஸ்திரி தோட்டத்தைச் சேர்ந்த தோழர் அ. வரதன் அவர்களுடைய பெண் மகவுக்கு புலவர் நன்னன் அவர்களால் மணிக்கொடி என்று பெயர் சூட்டப்பட்டது. அதன் நினைவாக தென்றல் வளர்ச்சிக்கு ரூ. 1 கொடுக்கப்பட்டது.

விற்பனைக்கு வந்துவிட்டது!
எஸ். எஸ். தென்னரசு
எழுதிய இனிய நாவல்
மயிலாடும் பாறை
விலை ரூ. 1-00
★
காவியக் கழகம்,
4, இராசகோபால் நாயக்கன் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

ஜூலை 10உ முதல் வெளிவருகிறது!
''இனமுழக்கம்''
(வார ஏடு)
ஆசிரியர்: சி. பி. சிற்றரசு
முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.
பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்
4, இராசகோபால் நாய்க்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை : : சென்னை - 2

சிரிப்புத்தான் வருகுதையா!

தோழர் சிவஞான கிராமணியை நினைக்கும்போதெல்லாம் எனக்குச் சிரிப்பு வருவது வழக்கம். அரசியல் துறையில் ஒரு கையைக் காங்கிரஸ்காரன் தோளிலும், மற்ருெரு கையைக் கம்யூனிஸ்ட்களின் காலடியிலும் வைத்துக்கொண்டு நொண்டி நொண்டி நடக்கும் இந்த அற்புதப் பிராணி, கல்லூரிகளில் இலக்கியம் பேசப் போய், புலவர்களிடம் மூக்கறுபட்டு வந்த கதைகள் பல. படிப்பறிவு மிக்கவர்கள் அவரைக் கேலி செய்து பேசும்போதெல்லாம் எனக்குக்கூடப் பரிதாபமாக இருக்கும். ஆனல் சில சினிமாப் படங்களுக்கு, அவரே தன் கையால் தோரணம் கட்டிக்கொண்டு திரிந்ததைப் பார்த்தபோது, உண்மையிலேயே நான் சிரித்துவிட்டேன். பணம் பத்தும் செய்யும்; அந்தப் பத்தில் ஒன்று சிவஞான கிராமணியைத் தோரணம் கட்ட வைத்தது. வாழ்க பணம்!

★

"கட்டபொம்ம"னில் நடித்தவரும் தமிழரசுக் கழகக்காரரல்ல; எடுத்தவரும் தமிழரசுக் கழகக்காரரல்ல. பின் ஏன் சிவஞான கிராமணி கொடி தூக்கிக்கொண்டு அலேந்தார்? ஸ்டுடியோ வட்டாரங்களில் இப்படித்தான் சொல்கிருர்கள்: "பணநாதா! எல்லாம் உன் செயல்!"

★

'குமுத'த்தின் விமர்சனத்தைக் கண்டு தோழர் சிவஞான சாம்பிராணியார்க்குக் கோபம் வருகிறது. சக்தி கிருஷ்ணசாமி எழுதிய நாடகத்தை அப்படியே படமாக்கியவர்கள், "ஆராய்ச்சி — ம. பொ. சி" என்று போட்டிருக்கிருர்களே-அந்தப் பாசம் வேறு 'குமுத'த்தைக் கண்டிக்க வைக்கிறது. "கட்டபொம்மன்" கதை விவாதம் நடக்கும்போதெல்லாம், சிவஞான கிராமணி சாணிப் பிள்ளேயாரமாதிரி உட்கார்ந்துகொண்டிருப்பாராம். தயாரிப்பாளர் ஏதாவது அபிப்பிராயம் சொன்னல், "ஆகா! அற்புதம்! அற்புதம்! அய்யர் சொல்வதுதான் சரி!" என்று தம் பக்தியை வெளிப்படுத்திக் கொள்வாராம். அதைத் தவிர, சொந்தமாக ஒரு எழுத்துக்கூட எழுதாத அவரை ஆராய்ச்சியாளராகப் போட்டிருக்கிருர்கள், படத்தில். நமக்குத்தான் தெரியுமே, ஆராய்ச்சித் துறையில் சிவஞான கிராமணி எவ்வளவு பெரிய புலி என்பது! இவர் ஏற்கனவே எழுதிய கட்டபொம்மன் புத்தகம் கூட, தி. நா. சுப்பிரமணியம் எழுதிய புத்தகத்தின் நகல் பிரதிதான். சரித்திர ஆராய்ச்சி கிடக்கட்டும், உரையாசிரியன் துணையில்லாமல் சிலப்பதிகாரத்தில் ஒரு வரிகூட இவருக்குப் புரியாதே! இவரது ஆராய்ச்சி எவ்வளவு ஆழமானது என்பதை விளக்கவா வேண்டும்? ஒருவேளே, கட்டபொம்மனுக்கு வைக்கப்பட்ட தளர்ந்து விழுந்துபோன கொடுக்கு மீசை இவரது ஆராய்ச்சியினல் நேர்ந்த அவதியாக இருக்கலாம். பூனேக்குக்கூட மீசை நிமிர்ந்துதான் நிற்கும்; காலேப் பார்த்தபடி தொங்குவதில்லே. கட்டபொம்மனின் மீசையும் சிவஞான கிராமணியின் மீசையும் தான் "ஏன் பிறந்தோம்? ஏன் பிறந்தோம்?" என்று தொங்குகின்றன.

★

'ஆங்கிலேய அதிகாரிகள் ஆங்கிலத்தில் பேசுவது மொழிபெயர்க்கப்படுகிறது, 'சிவகெங்கைச் சீமை'யில். ஆனல் மருதுபாண்டியர் தமிழில் பேசுவது மொழிபெயர்க்கப்படவில்லே" என்கிருர் சிவஞானகிராமணி. பாவம்! அவரது இலக்கிய அறிவு அவ்வளவு! தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி, பிறமொழிகளிலும் நாடகத்திற்கு இலக்கணமும் மரபும் இருக்கின்றன. தோன்ருமல் தோன்ற வைத்தல், துணைகாட்டித் தலே அறிவித்தல், முன்னது விளங்கப் பின்னது உரைத்தல், உள்ளது கொண்டு இல்லது உரைத்தல், இல்லது கொண்டு உள்ளது உரைத்தல், ஒன்றில் மற்றவர் உள்ளம் வகுத்தல் எனப் பல இலக்கணங்களும் மரபும் கொண்டது நாடக இலக்கியம். இதில் ஒரு முறையை ஆங்கிலத்தில் "Suggestive" என்பார்கள். ஒன்றினைக் கொண்டு மற்றவற்றைத் தீர்மானிப்பதைத்தான் இப்படிச் சொல்வார்கள். ஆங்கிலம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதைக் காட்டிவிட்டால், தமிழும் அவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டதாகக் கருதும்படி விடுவது நாடக மரபு. இவ்வளவையும் படித்தறிந்த அறிவு சிவஞானத்திற்கு இல்லே. அதனல் நாடக யாப்பின் வேகப் பிணைப்பை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லே. பரிதாபத்திற்குரிய ஒரு கட்சியின் அனுதாபத்திற்குரிய தலேவராக அவர் இருப்பதால், அன்புள்ளத்தோடு அவருக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் வீடு "13, அருணச்சல ஆச்சாரி தெரு, சேப்பாக்"கத்தில் இருக்கிறது. தினசரி காலேயில் அங்கு போய், குறைந்தபட்சம் நாடக இலக்கணத்தையாவது கற்றுக்கொள்வது நல்லது.

★

"சிவகெங்கைச் சீமை" கண்ணுத்தாள், மைத்துனன்மீது வைத்த பாசத்தால் கணவனேக் கொல்கிருளாம். இதுவும் "சிலம்புச்செல்வ"ரின் தெளிவில்லாத மூளேயிலிருந்து, உருவில்லாமல் வெளிவந்த குழப்புச் செல்வம். கேளுங்கள்! ஒருபுறம் வீடு; மறுபுறம் நாடு. வீடு வாழக் கணவன் வாழ வேண்டும்; நாடு வாழ மைத்துனன் வாழ வேண்டும். இருவரில் ஒருவர் இறந்துதான் தீர வேண்டும் என்ற முடிவு வந்துவிட்டதால், கணவனேக் கொன்ருள் கண்ணுத்தாள். கதைப் போக்கில் மைத்துனன் மீது வைத்த பாசம் நாட்டுப்பற்ருகவே தெளிந்து வந்திருப்பதை ஆழ்ந்த அறிவுள்ளவர்கள் புரிந்துகொள்வார்கள். சிவஞான கிராமணிக்குத்தான் 'அது" இல்லேயே! போகட்டும். பொது மக்களிலே இரண்டொருவர் சிவஞான கிராமணியின் எழுத்துக்களேக் கண்டு குழப்பம் அடையக்கூடும் என்றே, ஆராய்ச்சியளவில் பதில் சொன்னேன். இல்லே என்ருல் ஆராய்ச்சிக் காலத்தை அந்த அறிவறியா அப்பாவிக்காக வீணடித்திருக்கமாட்டேன்.

★

'அயோத்திராமன் தமிழில் பேசும்போது, ஆங்கிலேயர் ஏன் தமிழில் பேசக்கூடாது?' என்று கேட்கின்ருரே சிவஞானத்தார் - அதற்கும் ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன். அவர் இப்படிக் கேட்டிருக்க வேண்டும்: "கட்டபொம்மன் பரம்பரையினர் இன்றுவரை தெலுங்குதானே பேசுகிருர்கள். அந்தப் பரம்பரையினரின் கட்டபொம்மனே சக்தி கிருஷ்ணசாமியின் செழிப்புமிக்க செந்தமிழைப் பேசும்போது, ஆங்கிலேயர்கள் பேசினல் என்ன?"

இப்படிக் கேட்டிருந்தால் ஓரளவாவது அவருக்கு ஆராய்ச்சி அறிவிருப்பதாக அர்த்தம். பாவம்! ஆந்திரர்களிடம் இருந்து தலேநகரை மீட்பதற்காக, தன் தலேயையே கையில் தூக்கிக்கொண்டு அலேந்தவர், தமிழகத்தின் உட்பகுதியில் ஒரு பாளேயத்தையே கைக்குள் வைத்துக்கொண்டிருந்த ஆந்திரர்களின் காலடியைத் தன் தலேயில் வைத்துக்கொண்டிருக்கிருர். இதல்லவா தனித் தமிழரசு என்பது!

★

இவரது அறிவைத் தூக்கி அடிக்கிறது, "கல்கி" பத்திரிகையின் அறிவு! நொந்துபோன ஒரு அரசியல் தலேவருக்காகவும், முடங்கிப் போன ஒரு பாடகிக்காகவும், தளர் நடை போட்டு வெளி வந்துகொண்டிருக்கும் அந்தப் "பாட்டிகள் பத்திரிகை" "சிவகெங்கை சீமை"யின் பாத்திரப் படைப்பிலேயே குறை காண்கிறது. "கல்கி"க்கும் வீரத்துக்கும் என்ன சம்பந்தம்? மருதுபாண்டியரும் ஊமைத்துரையும் கோழையர்போல் காட்சியளிக்கிருர்களாம். "அட, வீராதி வீரா! வெண்ணே வெட்டி தீரா!" என்று தான் சொல்லத் தோன்றுகிறது. ஆச்சாரியார் எழுதிய "வியாசர் விருந்து" தொடர் கட்டுரையை, அந்த "கல்கி"ப் பாட்டிதான் வெளியிட்டிருந்தாள். அதிலே திரௌபதியைத் துகிலுரியும்போது அவளது ஐந்து கணவன்மார்களான தடிஎருமைகளும் கைகளேக் கட்டிக்கொண்டு, ரசித்துக்கொண்டிருந்த காட்சியைச் சொல்லாமல் விட்டுவிட்டாரோ, ஆச்சாரியார்? கொஞ்சம் பொறுங்கள். அடுத்த வாரம் "பாத்திரப் படைப்பு" என்பது பற்றிக் கட்டுரை எழுதுகிறேன். "'சிவகெங்கைச் சீமை'யில் மருதுபாண்டியர்கள் பொறுப்புள்ளவர்களாகக் காட்சியளிக்கிருர்களா? கோழைகளாக வருகிருர்களா?" என்பதையும், பாரதத்திலே எத்தனே வலுவான கோழைகள் வருகிருர்கள், இராமகாதையிலே இராமன் எவ்வளவு பெரிய பேடி என்பதையும் படித்துப் பாரு[ங்]கள். அதன் ... "கல்கி" பத்திரி... காடு" விமர்சகரை... கள்!

கண்ணதா...

> **"தென்றல்"**
> அதிகம் செலவாகும் இலக்கி[ய வாரக்]
> கிழமை இதழ்.
>
> ★
>
> (உள் நாடு)
>
> ஆண்டுச் சந்தா ரூ. 7-...
> ஆறு மாதம் ரூ. 3-...
>
> (வெளி நாடு)
>
> ஆண்டுச் சந்தா ரூ. 10-...
> ஆறு மாதம் ரூ 5-25

வருந்துகிறேம்.

அருப்புக்கோட்டை திரு எம். எஸ். இராம... அவர்களின் அன்னேயார் காலமான செய்தி கே... வருந்துகிறேம். நாட்டிற்கொரு வீரமகனேத் ... அவ்வன்னேயாருக்கு நம் இறுதி வணக்கங்கள் ... தாகுக.

"தென்றல்" அடுத்த இதழில்—

கண்ணதாசன்

எழுதும் கட்டுரை

"பாத்திரப் படைப்பு"

அடுத்த வாரம் வெளிவருகிறது

S. S. L. C. 1960

1. முடியரசன் தமிழ் உரை நூல்
   எழுதியவர்: கவிஞர் முடியரசன்
   விலே ரூ. 2-25.

2. **LEOS TEXT EXAMINER**
   எழுதியவர்: T. N. சுந்தரம் B.A., L.T.
   விலே ரூ. 3-25.

வசந்தம் பதிப்பகம்
69, பீட்டர்ஸ் ரோடு,
சென்னே-6.

ஆசிரியர் கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னே-6. தமி[ழ்நா]டு